வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 318 பக்கங்கள் : 20



07 'வட இலங்கையில் அதிகரிக்கும் சீன நடமாட்டம்'! 'இந்து' நாளிதழின் செய்தி உண்மையானதா?



08 13 வது திருத்தத்தின் கடந்த காலமும் எதிர்காலமும்



09 வாழ்வின் யதார்த்தம் சித்திரித்த தெளிவத்தை ஜோசப்



10 ஜே.ஆரை ஜனாதிபதி யாக்கியது 22ஆவது திருத்தம்!

### பொதுமன்னிப்பு அளிக்கப்பட்ட

# எட்டு அரசியல் கைதிகளில் நால்வரே வீடு திரும்பினர்!

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

**மன்னார், ஒக். 23**

**ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய 8 தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் முற்று முழுதாக விடுவிக்கப்பட்டு வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீபாவளியையொட்டி ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் 8 தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான கடிதம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்குச் சென்றிருந்தது.

ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய 8 தமிழ் அரசியல் கைதிகளும் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர். அவர்களில் நான்கு பேர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டு வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். ஏனைய நான்கு பேரும் விடுவிக்கப்படுவதில் சிறுசிறு சட்டச் சிக்கல்கள் நிலவுகின்றன.

19

# பொருளாதார நெருக்கடியால் இலஞ்சம் பெறுதல் அதிகரிப்பு

*கொழும்பு, ஒக். 23*

பொருளாதார நெருக்கடி காரணமாக நாடு தழுவிய ரீதியில் இலஞ்சம் பெறும் முறைப்பாடுகள் 20 முதல் 30 வீதம் வரை அதிகரித்துள்ளதாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் பல இலஞ்ச வழக்குகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு தெரிவிப்பதில்லை எனவும் சிலர் இலஞ்சம் பெற்று தமது பணியை இலகு

19

# புலமைப்பரிசில் பரீட்சை நடைமுறையில் மாற்றம்

*கொழும்பு, ஒக். 23*

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான நடைமுறையை இந்த வருடம் முதல் திருத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி பரீட்சாத்திகளுக்கு பரீட்சை வினாத்தாளின் இரண்டாம் பாகம் முதலில் வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள

19

# 1 வருட காலத்திற்குள் புதிய அரசியலமைப்பு

### வாக்குறுதியளித்தாராம் ஜனாதிபதி

*கொழும்பு, ஒக். 23*

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து விசேட கவனம் செலுத்தி, ஒரு

19

# மாகாண சபைத் தேர்தல் மார்ச் நடக்காவிடின் நீதிமன்றை நாட மக்களுக்கு உரிமை உண்டு!



### கூறுகின்றார் பைசர் முஸ்தபா

*கொழும்பு, ஒக். 23*

மாகாண சபைத் தேர்தல்களை அடுத்தாண்டு மார்ச் மாதத்திற்குள் நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். குறித்த காலத்திற்குள் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தாது போனால் நீதிமன்றத்தை நாடும் உரிமை பொது மக்களுக்கு உண்டு என முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்

19

# தெல்லிப்பளையில் போதைப்பாக்குடன் பாடசாலைக்குச் சென்றான் மாணவன்!

*யாழ்ப்பாணம், ஒக். 23*

போதைப்பாக்குடன் பாடசாலைக்கு வந்த மாணவன், தனது கையைப் பிளேட்டால் அறுத்து காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தெல்லிப்பளைப் பகுதியில் உள்ள பாட

19

# '22 ஐ நிறைவேற்றாவிட்டால்...!'

### ஆளும்கட்சியினரை எச்சரித்தார் ரணில்


*கொழும்பு, ஒக். 23*

22 ஆவது அரசமைப்பை நிறைவேற்ற முடியாதுவிட்டால் அனைத்துலக நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான சிங்கள வார ஏடொன்றின் "அரசியல்

19

## எங்களைப் போல ஆகிவிடாதீர்கள்...!



போதைக்கு அடிமையானவர்கள் விடுத்துள்ள கண்ணீர் கோரிக்கை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

பாராளுமன்றத்தில் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்திருந்த இருபத்தியோராவது அரசமைப்பு திருத்தம் பாராளுமன்ற பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு வர்த்தமானியிலும் வெளிவந்திருந்ததால், அரசு சமர்ப்பித்த யோசனை இருபத்தி இரண்டாம் திருத்தம் என்று பாராளுமன்றில் பதிவுசெய்யப்பட வேண்டியதாயிற்று.

ஆனாலும் அது இப்போது பாராளுமன்றில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டதால் இனி அதுவே இருபத்தியோராவது திருத்தமாக இருக்கப்போகின்றது.

இந்தத் திருத்தம் பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதனை மூர்க்கத்தனமாக எதிர்த்த சுமந்திரன் மாத்திரம் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

சுமந்திரன் கூறுவதுபோல நிறைவேற்று அதிகாரம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்பது சிறுபான்மை இனத்துக்குப் பயனுள்ளதுதானா அல்லது அதன் நன்மை - தீமை பற்றி பிறிதொரு பத்தியில்தான் முழுமையாக பார்க்கவேண்டும்.

ஆனால், அதற்காக இந்தத் திருத்தத்தை முழுமையாக எதிர்க்க வேண்டுமா என்பதுதான் கேள்விக்குரியது. நேற்றைய இந்தப் பத்தியிலும் ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று கோருகின்ற நாங்கள், ஜனாதிபதியின் அதிகாரங்களை கொஞ்சமாவது குறைக்கின்ற ஒரு விடயத்தை ஏன் எதிர்க்கவேண்டும் என்று கேள்வி எழுப்பியிருந்தோம்.

இப்போது அதுவல்ல நாம் இங்கே சொல்ல வருவது.

இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் நடைபெற்ற எல்லா விடயங்களிலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக கூட்டமைப்பின் முடிவுக்கு கட்டுப்பட்டு நடந்துகொண்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில்மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் மாத்திரமன்றி, ஒவ்வொரு வரவு - செலவுத் திட்டத்தையும்கூட ஆதரித்து வாக்களித்திருந்தது.

மகிந்தரின் ஆட்சியின்போது பாதுகாப்பு செலவினங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி விடயத்தைச் சுட்டிக்காட்டி அதனை எதிர்க்கின்ற கூட்டமைப்பு, நல்லாட்சிக் காலத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதேபோல அதிக நிதி ஒதுக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டங்களை ஆதரித்திருந்தது. கடைசியாக நடைபெற்ற - ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடந்த வாக்கெடுப்பிலும் கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பது என்று முடிவெடுத்த பின்னர் அனைவரும் ஒற்றுமையாக டலஸூக்கு வாக்களித்ததாகக் கூறினார்கள்.

இரகசிய வாக்கெடுப்பு என்பதால் அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பது தெரியாவிட்டாலும் ஆகக் குறைந்தது கட்சி முடிவெடுத்தபடிதான் வாக்களித்தோம் என்று வெளியே கூறினர்.

அதன்மூலம் அந்த கட்சி ஒரு கட்டுக்கோப்பான கட்சி என்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. தமக்குள் என்னதான் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கட்சியாக ஒரு முடிவெடுத்து அதன் படி செயல்படுவதில் உறுதியாக இருந்தனர்.

ஆனால், கடைசியாக இந்த இருபத்தியிரண்டாவது திருத்தத்திற்கான வாக்கெடுப்பில் அந்த உறுதி - ஒற்றுமை சிதைந்து போனதைக் காணமுடிந்தது. முன்னதாக, அதுதொடர்பாக ஆராய்வதற்காக கூட்டமைப்பின் எம். பிக்கள் கூடி ஆராய்ந்த போது அதனை எதிர்க்கவேண்டும் என்று சுமந்திரன் கோரிக்கை வைத்தபோது, அதனை மற்றைய எம்.பிக்கள் ஆதரிக்கவில்லை என்றும், தாங்கள் ஆதரிக்கப்போவதாகவும் தெரிவித்தபோது, பெரும்பான்மையினரின் முடிவுப்படி ஆதரிப்பது என்பதை கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு தமது முடிவாக எடுத்ததாகத் தெரியவில்லை.

இதுவரை காலமும் சம்பந்தன் எடுக்கின்ற முடிவை (அது சம்பந்தன் எடுத்ததுதானா என்பது வேறு விடயம்) அவர் அறிவிக்க அதனை அப்படியே கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு எடுப்பதுதான் வழமையாக இருந்துவந்தது. ஆனால், இந்தக் கடைசி கூட்டத்தில் சம்பந்தன் கலந்துகொள்ளவில்லை. வினோ எம். பி. வைத்தியசாலையில் இருக்கிறார். சாணக்கியன் வெளி நாட்டில். இதனால் ஏழு பேர் மாத்திரமே கலந்துகொண்டனர். அந்த ஏழு பேரில் ஆறு பேர் ஆதரிப்பது என்று முடிவெடுத்தால் அதுவே பாராளுமன்ற குழுவின் முடிவாக இருக்கமுடியும். அப்படியெனில், குழுவின் முடிவை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பின்பற்றவேண்டும். இதுவே, இதுவரை கூட்டமைப்பு கடைப்பிடித்துவரும் நடைமுறை.

ஆனால், இருபத்தியிரண்டாவது திருத்தத்துக்கான வாக்களிப்பில் சுமந்திரன் கலந்துகொள்ளவில்லை. மற்றைய ஆறு பேரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர். கூட்டமைப்பு சம்பந்தன் இல்லாத காலத்தில் எப்படிப் பயணிக்கப்போகின்றது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இப்போதே கூட்டமைப்பினர் மாத்திரமல்ல, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தில் அக்கறை உள்ளவர்கள் அனைவரும் இது குறித்து இப்போதே சிந்திக்காவிட்டால் எதிர்காலம் கேள்விக்குரியதாகிவிடும்.!

**- ஊர்க்குருவி.**

# சிறுவர் வன்முறைகள் தொடர்பில் 8 மாதங்களுள் 7,568 முறைப்பாடு

*கொழும்பு, ஒக். 23*

இலங்கையில் இந்த வருடத்தின் கடந்த 8 மாத காலப்பகுதியில், சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பில், 7 ஆயிரத்து 568 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவற்றுள் அதிகமான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

சிறுவர்கள் மீதான தாக்குதல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், தொழிலாளியாகப் பயன்படுத்தல் மற்றும் யாசகத்தில் ஈடுபடுத்தல் என்பன தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கம்பஹா, குருநாகல், அநுராதபுரம், கண்டி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை முதலான மாவட்டங்களிலும், சிறுவர்கள் தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் துன்புறுத்தல்கள் குறித்து, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின், 1929 என்ற இலக்கத்தை அழைத்து முறைப்பாடளிக்க முடியும்.

கடந்த 2021ஆம் ஆண்டு 11 ஆயிரத்து 187 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்கள் மீதான துன்புறுத்தல்கள் குறித்து, அவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, அறிக்கையிடப்பட்டதை விடவும் பெருமளவான சம்பவங்கள் அறிக்கையிடப்படாதுள்ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்புத் திட்டம் அறிமுகமாகின்றது

*கொழும்பு, ஒக். 23*

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், மக்களின் போஷணை மட்டத்தை மேம்படுத்தவும் மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்ட உணவு வங்கிகள் மற்றும் உணவுப் பரிமாற்ற மையங்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் மக்களின் போஷணை மட்டத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல், நேற்று முன் தினம் உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட தலைமையில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சினால், சமய ஸ்தலங்களை மையமாகக் கொண்டு இந்த வேலைதிட்டத்தை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கூடாக 14,022 கிராம சேவகர் பிரிவுகளிலும் அமுல்படுத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, குறித்த பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்படும் உணவு பரிமாற்ற மையமானது, அப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய தேவைக்கு அதிகமான உணவுகளை சேகரித்து உணவு வங்கிக்கு வழங்கும். பின்னர் அந்த உணவு, உணவு வங்கியூடாக உணவு பற்றாக்குறையுடைய குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும்.

மேலும் இச்செயற்பாட்டின் மூலம் தேவைக்கதிகமாக உள்ள உணவை குறித்த பிரதேச வாசிகளிடையே மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களிடையேயும் பகிர்ந்தளிக்க முடிவதனால் உணவு வீண் விரயம் செய்யப்படுவதை தடுக்க முடியும்.

இக்கலந்துரையாடலில் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையின்படி பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்கள் மற்றும் அவற்றின் அபிவிருத்தி ஆகியவற்றை திட்டமிடுவது தொடர்பான செயன்முறைக் குறித்தும் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (அ)

## பட்ஜெட் விவாதம் நவம்பர் 10 ஆரம்பம்

### டிசெம்பர் 8 வாக்கெடுப்பு

*கொழும்பு, ஒக். 23*

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரை, நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் நவம்பர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படவுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நவம்பர் 9 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தவுள்ளதுடன் நவம்பர் 10 முதல் டிசெம்பர் 8 வரை வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதம் நடத்தப்படும்.

டிசெம்பர் 8 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் (ஒதுக்கீட்டுச்சட்டமூலம்) முதலாம் வாசிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவினால் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது. (அ)



## இலங்கையர்கள் மூவர் தனுஷ்கோடியில் தஞ்சம்

*கொழும்பு, ஒக். 23*

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் நேற்றுக் காலை கடல் மார்க்கமாக தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் தவித்து வருவதாக கிடைத்த தகவலையடுத்து மரைன் பொலிஸார் படகில் சென்று நேற்றுக் காலை மீட்டு தனுஷ்கோடி அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 184 ஆக உயர்ந்துள்ளது. (அ)

# நாணய நிதியம், உலக வங்கி இலங்கைக்கு அதிகபட்ச ஆதரவு

## அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்

கொழும்பு, ஒக். 23

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இலங்கை யின் கடன் வழங்குநர்கள் இலங்கையை ஸ்திரப்படுத்துவ தற்கு இலங்கையின் பொருளா தாரத்துக்கு அதிகபட்ச ஆத ரவை வழங்குவதாக உறுதிய ளித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேம சிங்க தெரிவித்தார்.

ஒக்டோபர் 10 முதல் 16 வரை வொஷிங்டனில் நடை பெற்ற சர்வதேச நாணய நிதி யம் மற்றும் உலக வங்கிக் குழு வின் வருடாந்த கூட்டங்கள் மற்றும் விசேட குழுக் கூட்டங் கள் என்பன தொடர்பில் அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

சர்வதேச நாணய நிதியத் தின் முகாமைத்துவப் பணிப் பாளர் மற்றும் பிரதி முகா மைத்துவ பணிப்பாளர்களு டன் இருதரப்பு சந்திப்புகள் இடம்பெற்றதாகவும், உலக வங்கியின் நிர்வாகப் பணிப் பாளர், தெற்காசிய பிராந்தியத் திற்கான உலக வங்கியின் உப தலைவர், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய உப தலைவர் மற்றும் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத் திச் சங்கக் குழு உள்ளிட்ட உலக வங்கி அதிகாரிகளும் இரு தரப்பு கலந்துரையாடல் களை நடத்தியதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு முன்னெப் போதும் இல்லாத வகையில் சவால்களை ஏற்படுத்திய நெருக்கடிகளின் தாக்கம் இந்த வருட வருடாந்த கூட்டங்க ளில் வலியுறுத்தப்பட்ட முக் கிய விடயங்களில் ஒன்று என் றும் அமைச்சர் சுட்டிக்காட்டி யுள்ளார். (அ)

# பிரதான போதை வர்த்தகர் உள்ளிட்ட நால்வர் கைது!

கொழும்பு, ஒக். 23

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருள் வர்த்த கத்தில் ஈடுபட்டு வந்த பிரதான போதைப்பொருள் வர்த்தகர் உள்ளிட்ட நால்வர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவின ரால் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப்பிரிவு தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின ருக்கு கிடைக்கப்பெற்ற இரக சிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத் தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த பிரதான போதைப் பொருள் வர்த்தகர் உள்ளிட்ட குழுவினர் இவ்வாறு கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

குறித்த பிரதான போதைப் பொருள் வர்த்தகர் நீர்கொழும் பில் இருந்து பெரியமுல்லை பகுதிக்கு மோட்டார் சைக்கி ளில் ஐஸ் போதைப்பொருளை எடுத்துச் செல்லும்போது பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமி ருந்து 750 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட் டுள்ளது. (அ)

# தொடரும் நெருக்கடியிலும் சாதனை படைத்த இ.போ.ச!

கொழும்பு, ஒக். 23

இலங்கை போக்குவரத்து சபையின் வருமானம் 2021ஆம் ஆண்டை விடவும் இந்த ஆண்டு இரட்டிப்படைந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஊடகங் களுக்கு கருத்துரைத்து அதன் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக்க சுவர்ணஹங்ச, எரி பொருள் விலை அதிகரிப்பு டன், பஸ் கட்டணங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட்டது. எனினும் எரிபொருள் விலை அதிகரிக் கப்பட்டமையை அடுத்து மக்கள் பொதுப் போக்குவ ரத்தை அதிகமாகப் பயன் படுத்தியுள்ளனர்.

இந்த இரண்டு காரணங் களின் அடிப்படையில், இந்த வருடம் இரட்டிப்பு வரு வாயைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ)

# முதியவருக்கு உதவச் சென்றவர் மதில் இடிந்து விழுந்து உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 23

கொழும்பு - கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் உள்ள வீட்டின் பாதுகாப்பு கருதி அமைக்கப் பட்டிருந்த மதில் நேற்று முன் தினம் இரவு இடிந்து விழுந்த தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜோசப் வீதியில் அமைந்துள்ள வீட் டின் மதில் இடிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது வீட் டின் அயல் வீட்டில் உள்ள முதியவருக்கு உதவி செய்யும் நோக்கில் சென்று முதியவரை வீட்டின் பின்புறத்தில் உள்ள மலசல கூடத்துக்கு அழைத் துச் சென்றபோது அங்கிருந்த மதில் இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

இதன்போது காயமடைந்த நபரை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மீட்டு கொழும்பு தேசிய வைத் தியசாலையில் அனுமதித்த னர். ஆயினும் சிகிச்சை பல னின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 55 வயதுடைய கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்தவரா வார். (அ)

# பயன்படுத்திய வாகனங்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 23

ஏற்கனவே பயன்படுத்தப் பட்ட வாகனங்களின் விலை வெகுவாகக் குறைந்துள்ளதால், வாகனம் கொள்வனவு செய்வ தற்கு இதுவே சிறந்த தருணம் என நாட்டிலுள்ள உள்ளூர் வாகன விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகனங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதாகவும், ஏற் கனவே இறக்குமதி செய்யப் பட்ட மற்றும் கையில் இருக் கும் வாகனங்களின் எண் ணிக்கை மாத்திரமே சந்தை யில் புழக்கத்தில் இருப்பதாக வும் அவர்கள் கூறினர்.

வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் யோசிக்க முடியாது. வாகனங்களின் விலைகள் கணிசமாகக் குறைய வில்லை, ஆனால் சிறிதள வுதான் என அவர்கள் தெரிவித் துள்ளனர்.

குத்தகையில் வட்டி செலுத் துதல் அதிகரித்து வருவதா லும், வைப்பு செய்பவர்களுக்கு அதிக வங்கி வட்டி விகிதங்க ளாலும், தங்கள் வாகனங்களை விற்பனை செய்த பின்னர் பணத்தை வைப்பு செய்யும் போக்கு உருவாக்கப்பட்டுள் ளது என்றும் அவர்கள் கூறி னர். (அ)

# அரிசிக் கையிருப்புக்களை பராமரிக்க முடியாத நிலை

கொழும்பு, ஒக். 23

பாதுகாப்பான அரிசி இருப்புகளை பராமரிக்க திறை சேரியிடம் இருந்து போது மான ஒதுக்கீடுகள் கோரப் பட்டதாகவும், ஆனால் இது வரை அது பெற்றுக் கொடுக் கப்படவில்லை என உணவு ஆணையாளர் திணைக்களம் கோபா குழு முன் தெரிவித் துள்ளது.

இதன் காரணமாக தேவை யான அரிசி இருப்புக்களை பராமரிக்க முடியாத நிலை ஏற் பட்டுள்ளதாக அந்த திணைக் கள அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் பாது காப்பான அரிசி கையிருப் பினை பராமரித்தல் மற்றும் சேமிப்பக பயன்பாடு குறித்த தணிக்கை அறிக்கையை ஆராய கோபா குழு, அதன் தலைவர் கபீர் ஹஷிம் எம்.பி தலைமையில் சமீபத்தில் கூடியது.

இதன்போது சராசரியாக 100,000 மெற்றிக் தொன் அரிசியை பராமரிப்பதற்கு வரு டத்திற்கு சுமார் 22 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக தெரியவந்துள்ளது.

2,50,000 மெட்ரிக் தொன் சேமிக்கும் திறன் கொண்ட கிடங்கு வளாகத்தை அறிவி யல் பூர்வமாக நவீனமயமாக் கிய போதிலும், அதன் அதிக பட்ச கொள்ளளவிற்கு சம மான இருப்புகளை சேமிக்க முடியவில்லை என உணவு ஆணையாளர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், உலக உணவுத் திட்ட உதவிகள் மற்றும் பிற நாடுகளில் இருந்து பெறப்படும் அரிசி உதவிகளை களஞ்சியப்படுத் தும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள அரச உணவுக் கிடங்கு வளாகங்கள் குறித்து முறை யான ஆய்வு நடத்தி, தரவு களைச் சேகரித்து, கிடங்கு களின் உரிமை குறித்த குறிப் பிட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஒரு மாதத்துக் குள் சமர்ப்பிக்குமாறு அமைச்சுச் செயலாளருக்கு குழு அறிவித்துள்ளது.

அத்துடன், நாட்டிலுள்ள குறிப்பிட்ட அரிசி கையி ருப்பை எந்த நிறுவனம் பேண வேண்டும் என்பதை கண்ட றிந்து சரியான தகவல்களை வழங்குமாறு, குழுவின் தலைவர் கபீர் ஹசிம் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

# மேலும் இருவர் நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, ஒக். 23

நாவலப்பிட்டி மற்றும் குளியாப்பிட்டி பிரதேசத்தில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந் துள்ளனர்.

எடண்டேவெல கால்வா யில் விழுந்து நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்ட 58 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன் தினம் பிற்பகல் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

5 பேரை ஏற்றிச் சென்ற வான் ஒன்று குளியாப்பிட்டி தியவளையிலிருந்து அருவ் பொல நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

எடண்டேவெல கால் வாய்க்கு அருகில் உள்ள நீர் மட்டத்தை பரிசோதிப்பதற் காக வாகனத்தை விட்டு இறங் கிய வான் சாரதி கால்வாயில் விழுந்து அடித்துச் செல்லப் பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். இதேவேளை, நாவ லப்பிட்டி, கலபடவத்த பிரதேசத் தில் கால்வாயில் தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள் ளார்.

உயிரிழந்தவர் கேகாலை பகுதியைச் சேர்ந்த 65 வயது டையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# யாழ். பஸ்களில் பயணிக்கும் இளம்பெண்களிடம் கைவரிசை!

## ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக். 23

யாழ்ப்பாணத்தில் பேருந்து களில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசி களை அபகரிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 9 அலைபேசிகள் கைப்பற்றப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒரு வரே இவ்வாறு இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி, நீர்வேலி, சுன்னாகம், பலாலி உள்ளிட்ட இடங்களில் பஸ்களில் பய ணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசிகளைச் சந்தேக நபர் அபகரித்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சி ஸின் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரே இந் தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அலைபேசிகளை தவற விட்ட பொலிஸ் நிலையங்க ளில் முறைப்பாடுகளை வழங் கியவர்கள் அலைபேசியை அடையாளம் காட்டுமாறு மாவட்ட குற்றத்தடுப்பு பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

# முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி சிவரூபனுக்கு கொலை அச்சுறுத்தல்!

## பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த 3 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பளை வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் வைத்தியர் எஸ். சிவரூபனுக்கு கொலை அச்சுறுத்தல் உள்ளதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.**

குறித்த வைத்தியர் யாழ். போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய காலப் பகுதியில் சுமார் 300 வரையிலான கொலை, பாலியல் வன்புணர்வு , சித்திரவதைகள் உள்ளிட்ட வழக்குகளில் சட்ட வைத்திய அதிகாரியாக முக்கிய சாட்சியமாக உள்ளார்.

குறித்த வழக்குகளில் எதிரியாக உள்ளவர்கள் தெற்கில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வழக்குகளின் முக்கிய சாட்சியாக உள்ள சட்ட வைத்திய அதிகாரியான வைத்தியர். எஸ். சிவரூபனும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணைகளுக்காக எதிரிகளை யாழ்ப்பாணம் , கிளிநொச்சி நீதிமன்றங்களுக்கு அழைத்து வரப்படும்போது, எதிரியுடன், சாட்சியையும் ஒரே சிறைச்சாலை வாகனத்தில் அழைத்து வருகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சியில் நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, எதிரிகளுடன் சாட்சியான தன்னையும் ஒரு வாகனத்தில் அழைத்து வருவதனால், தனது உயிருக்கு ஆபத்துள்ளதாக நீதிமன்றின் கவனத்திற்கு வைத்தியர் கொண்டு வந்தார்.

இதனை அடுத்து, வழக்குகளின் முக்கியமான சாட்சியான சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பு குறித்து விசேட கவனம் செலுத்துமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிமன்று அறிவுறுத்தியுள்ளது.

பளை வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரான சின்னையா சிவரூபன் 2019 ஆம் ஆண்டின் ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம், வெடிபொருள்களை பதுக்கி வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். இவரது கைதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 7 பேர் கைதானர்கள்.

இவருடன் கைதான 7 முன்னாள் போராளிகளும் இரண்டு வருடங்களிற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படாது அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மருத்துவர் சிவரூபனின் விடுதலை திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுவதாக குடும்பத்தவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)




# நாகர்கோவில் மேற்கு, அம்பன் மக்களுக்கு மரமுந்திரிகை கன்று

வடமராட்சி, ஒக்.21

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு, அம்பன் பகுதிகளில் மர முந்திரிகை செய்கையை மேம்படுத்தும் நோக்கில் யாழ்.மாவட்ட செயலகத்தின் சிறு தொழில் அபிவிருத்தி பிரிவினரின் ஏற்பாட்டில் மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அனுசரணையில் மர முந்திரிகை கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2:30 மணியளவில் நாகர்கோவில் மேற்கு கிராம அலுவலகத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.நாகேந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர்

க. பிரபாகரமூர்த்தி, வட பிராந்திய மர முந்திரிகை கூட்டுத்தாபன முகாமையாளர் சஞ்சீவன், யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சிப்பிரிவு உதவிப் பணிப்பாளர் ரீ.தனஞ்சயன், சிறுதொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் வஜிதன், மற்றும் அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்திநுத்தியோகத்தர்கள் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 800 மர முந்திரிகை கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

(அ-02)

# சதொசவில் கட்டுப்பாடில்லை

கொழும்பு, ஒக். 23

லங்கா சதொசவில் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது, சிவப்பு சீனி தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த மட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனிக்காக விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாட்டை அடுத்த வாரத்தில் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

சதொசவில் கடந்த தினம் சில பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வங்கிக்குள் சென்ற கார்!



கொழும்பு, ஒக். 23

தனியார் வங்கி ஒன்றின் சுவரை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து சொகுசுக் கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. நேற்றுக் காலை 8 மணியளவில் கஹவத்தை நகரில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஆயினும் எவருக்கும் காயங்கள் ஏற்பட வில்லை.

விபத்தில் வங்கி சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வங்கிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வங்கியின் படிக்கட்டுக்கள் ஊடாக முன்னோக்கிச் சென்று வங்கியினுள் புகுந்துள்ளது.

குறித்த காரை பல் மருத்துவர் ஒருவர் செலுத்திச் சென்றுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(அ)

# யாழில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டாரென இராணுவத்தில் பணியாற்றுபவர் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 23

தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியின் சங்கிலியை அறுத்த, இராணுவ சிவில் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றுபவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மடக்கிப்பிடிக்கப்பட்ட நபரை இராணுவத்தினர் அழைத்துச் செல்ல முற்பட்டமையால் அங்கு பதற்றமான சூழல் உருவாகிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வள்ளுவர்புரம் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தனியார் வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சிறுமிக்கு பின்னல் மோட்டார் சைக்கிளில் வந்த நபர், சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார்.

இதனால் சிறுமி நிலைமை தடுமாறி கீழே விழுந்து காயங்களுக்கு உள்ளானார். அதனை அவதானித்த ஊரவர்கள் ஒன்று திரண்டு வழிப்பறிக் கொள்ளைச் சந்தேக நபரை துரத்திச் சென்று மடக்கிப் பிடித்ததுடன், சிறுமியை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்டவரிடம் ஊரவர்கள் விசாரணைகளை முன்னெடுத்தவேளை, குறித்த நபர் காங்கேசன்துறை, கொல்லன்கலட்டி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணிபுரிபவர் எனவும் தெரியவந்ததுடன், சிறுமியின் சங்கிலியும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பலாலி பொலிஸாருக்கு ஊரவர்கள் அறிவித்த நிலையில், பொலிஸாருக்கு முன்னதாக இராணுவ தரப்பினர் சம்பவ இடத்துக்கு விரைந்து, குறித்த நபரை மீட்டு தம்முடன் அழைத்துச் செல்ல முற்பட்டனர்.

அதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால் அவ்விடத்தில் பதற்றம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் சம்பவ இடத்துக்கு வந்த பலாலி பொலிஸார் குறித்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# நவம்பர் முதலாம் திகதி முதல் தனிநபர் வருமான வரி அறவீடு

கொழும்பு, ஒக். 23

பாராளுமன்றத்தின் நிதிக் குழுவின் ஒப்புதல் மற்றும் சபாநாயகரின் கையொப்பத்திற்குப் பிறகு புதிதாக வெளியிடப்பட்ட தனிநபர் வருமான வரி நவம்பர் முதலாம் திகதி முதல் அமல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருவன்வெல்லவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்தார் .

முன்னதாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

அதன்படி மாத வருமானம் பெறுபவர் ரூ. 100,000 அல்லது அதற்கு மேல் வருமான வரி செலுத்த வேண்டியிருப்பதோடு உயர்ந்த தனிநபர் வருமான வரி விகிதம் 36 வீதம் உயர்ந்துள்ளது.

(அ)

ஈழநாடு
Eelanadu
23.10.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# ரணிலின் முதல் அரசியல் வெற்றி?

176 வாக்குகளினால், 22ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 22ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவது தொடர்பில் ஆரம்பத்தில் சந்தேகங்கள் நிலவின. விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. பாராளுமன்ற பலமில்லாத ரணில் விக்கிரமசிங்க, இந்தச் சவாலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார் என்னும் கேள்வியெழுந்தது. சந்தேகம் நிலவியது. ஆனால் தற்போது எதிரணியினரின் ஆதரவுடன் 22ஆவது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பினரும் ஆதரவு வழங்கியிருக்கின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை இது ஓர் அரசியல் வெற்றியாகும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் எவ்வித பலமும் இல்லை. இப்போதும் அவர் ஒரு தனியாளாகவே இருக்கின்றார். பொதுஜன பெரமுனவினர் தொடர்ந்தும் ரணிலுடன் முரண்பட்டு வருகின்றனர். அமைச்சரவை நியமனம் இப்போதும் இழுபறியிலேயே தொடர்கின்றது. இவ்வாறானதொரு நிலையில்தான், 22ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதிருந்தால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறமுடியாதென்று, ரணில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை எச்சரித்திருந்தார். அதேவேளை நாடு முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமாயின், சில அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டேயாக வேண்டும் என்னும் யதார்த்தத்தை புறக்கணிக்க முடியாத நிலைமை எதிரணியினருக்கும் ஏற்பட்டது. ஏனெனில் மீளவும் பொருளாதார நிலைமை சிக்கலடைந்தால், மீளவும் போராட்டங்கள் ஏற்படும். வன்முறைகள் பாரியளவில் பரவலடையலாம். எனவே அனைவரும் கட்சி நலனை புறம்தள்ளி நாட்டை முன்னிறுத்தி சிந்திக்க வருமாறு ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் வலியுறுத்திவந்தார். ரணிலின் மீது விருப்பம் இல்லாவிட்டாலும் கூட, ரணிலை தற்போதைய நிலையில் தோற்கடிப்பதால் எவ்வித பலனும் இல்லையென்பதை அனைவருமே உணர்ந்திருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான், 22ஆவது திருத்தச்சட்டத்திற்கு சஜித் பிரேமதாஸவும் ஆதரவை வழங்கியிருக்கின்றார்.

விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால், நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு கைகொடுக்க வேண்டியது ஒரு அரசியல் கடமையாகவே மாறியிருக்கின்றது. அதே வேளை ராஜபக்ஷக்கள் என்னதான் விரும்பினாலும் கூட, ஒரு கட்டத்திற்கு மேல் சில அடிப்படையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதை, அவர்களாலும் தடுக்க முடியாது. இதுவும் தற்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில் நோக்கினால், 22ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பாரதூரமான மாற்றங்கள் இல்லை. எனினும் சுயாதீன கட்டமைப்புக்களை பலப்படுத்த வேண்டுமென்னும் கோரிக்கையை, தமிழர்களும் ஆதரிக்கத்தான் வேண்டியிருக்கின்றது. ஏனெனில், இவ்வாறான மாற்றங்களை கூட, தென்னிலங்கை அடிப்படைவாதிகள் எதிர்க்கின்றனர். நாடு சிறிதும் முன்நோக்கிப் பயணித்துவிடக்கூடாதென்றே அவர்கள் கருதுகின்றனர். இந்த நிலையில் அடிப்படைவாதிகள் போன்று கூட்டமைப்பும் செயற்பட முடியாது. ஏனெனில் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பமாக இருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கூட்டமைப்பின் ஆதரவை நோக்க வேண்டும். ஆனால் இவ்வாறான மாற்றங்களோடு மட்டும் கூட்டமைப்பு திருப்திப்பட்டுக்கொள்ள முடியாது.

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் இலக்கை நோக்கி நகரவேண்டும். அத்தோடு, மாகாண சபைகள் சுயாதீனமாக செயற்படக்கூடியவாறான அரசியல் மாற்றங்களை நோக்கிச் செயற்படவேண்டும். அதற்கான பிரத்தியேக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டும். இதில் எவரையும் நம்பிச் செயற்பட முடியாது. ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தின் அனுபவத்திலிருந்தே சிந்திக்க வேண்டும். ரணிலிடம் இனவாதம் இல்லாதிருக்கலாம், அவர் சாதகமான கருத்துக்களை கூறலாம். ஆனால் அவற்றுடன் மட்டும், தமிழர்கள் திருப்திப்பட்டுக்கொள்ள முடியாது. இனவாதிகள் பலமடைந்தால் ரணில் பின்வாங்கிவிடுவார். எனவே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வது தொடர்பில் மட்டுமே தமிழ்க் கூட்டமைப்பும், ஏனையவர்களும் சிந்திக்க வேண்டும். அதாவது, ரணில் வெல்வதல்ல முக்கியம், தமிழர்கள் வெற்றி பெறுவதே முக்கியம்.

# புரையோடி போன இனப் பிரச்னைக்கு எந்த சட்டத் திருத்தமும் தீர்வாகாது!

## கருணாகரம் எம். பி.

*கொழும்பு, ஒக். 23*

*இதுவரை நடைபெற்றுள்ள 20 திருத்தங்களில் எந்தத் திருத்தம் நாட்டு நன்மைக்கானது? எந்தத் திருத்தம் ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் புரையோடிப்போன தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வானது? இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி அதன் நிர்ப்பந்தத்தால் உருவான 13ஆவது திருத்தச் சட்டத்தை இனப்பிரச்னை தீர்வின் தொடக்கப்புள்ளியாக வைத்து முன்நோக்கிச் செல்லலாம் என்ற எமது எண்ணத்திலும் கூட அந்தச் சட்டத்தின் உள்ளடக்கத்தை சிதைத்து சின்னாபின்னப்படுத்தி வலது குறைந்த நிலைக்குத் தள்ளி எமது எண்ணத்தில் மண்ணைத் தூவினீர்கள் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.*

*நேற்று முன்தினம் அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவரின் உரையில், எமது நாடு வரலாற்றுக் காலம் முதல் 1833இல் கோல்புறுக் - கமரூன், 1929ல் மனிங், 1924இல் மனிங் டெவன்சியர், 1931ல் டொனமூர், 1947இல் சோல்பரி என குடியரசாகும் வரை பல அரசியலமைப்புக்களைக் கண்டுள்ளது. 1972இல் டொமினியன் அந்தஸ்திலிருந்து குடியரசாக மாறியது. 1978இல் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இன்று இது 22ஆவது திருத்தத்துக்கு உள்ளாக்கப்படுகிறது. இந்த அரசியலமைப்பின் வயது 44 வருடங்களாகும்.*

*ஒரு நாட்டின் அரசமைப்பு திருத்தம் செய்யப்பட முடியாததோ, திருத்தம் செய்யப்படக் கூடாததோ அல்ல. அந்தத திருத்தங்கள் நாட்டு நலனை, மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும். சுமார் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட ஐக்கிய அமெரிக்க அரசமைப்பு இதுவரை 27 திருத்தங்களைக் கண்டுள்ளது. 73 வருடங்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு இதுவரை 105 திருத்தங்களைக் கண்டுள்ளது. இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது அரசமைப்பு ஒன்றும் கல்லில் பொழிந்த கல்வெட்டல்ல. தேவைக்கேற்ப திருத்தப்பட வேண்டியதே.*

*திருத்தப்பட்ட அரசமைப்புத் திருத்தங்களின் வரலாறுகளைக் கூறினால் அது நீண்டு விடும். இரண்டாவது, 3ஆவது, 4ஆவது, 6ஆவது, 13ஆவது, 18ஆவது, 19ஆவது, 20ஆவது என இந்தத் திருத்தங்களில் எந்தத் திருத்தம் நாட்டு நன்மைக்கானது? மக்களின் நன்மைக்கானது? எந்தத் திருத்தம் ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் புரையோடிப் போன தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வானது?*

*உங்களுடைய தேவைக்காக பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கான அரசியலமைப்பின் 7ஆவது திருத்தத்தின் மூலம் இலங்கையின் 24 நிருவாக மாவட்டங்களை 25 நிருவாக மாவட்டங்களாக மாற்றினீர்கள். உங்களுடைய தேவைக்காக மாகாணங்களின் எல்லைகளைப் பிரித்து அருகிலுள்ள மாகாணங்களுடன் இணைத்து தமிழர்களின் குடிப்பரம்பலைக் குறைத்து அந்தந்த மாகாணங்களில் தமிழர்களை சிறுபான்மையினர் ஆக்குவதற்கான காரியங்களைச் செய்தீர்கள். உங்களுக்குத் தேவையெனில் பிரதேச சபைகளை, பிரதேச செயலகப்பிரிவுகளை உருவாக்குவீர்கள். ஆனால், என்றோ உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் எம் தமிழர்களுக்கான கல்முனை வடக்கு பிரதேச செலயகத்தினை தரமுயர்த்துவதற்கு உங்களுக்கு இனவாதமொன்றைத் தவிர எந்த அரசமைப்பின் உறுப்புரை தடை செய்கிறது.*

*இந்த நிலைமையில் நாம் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் காணப்போவது என்ன இன நல்லிணக்கமா, மத நல்லிணக்கமா, தேசிய ஒருமைப்பாடா அல்லது பொருளாதார மேம்பாடா, இதில் எதைக் குறிவைத்து இந்த 22ஆவது திருதத்தை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.*

*இந்தச் சபையின் ஊடாக நாட்டின் பெரும் பான்மைச் சிங்கள - பௌத்த மக்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.*

*ஆட்சியை கைப்பற்றுவதற்காக, பதவியை கைப்பற்றுவதற்காக, அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக எந்த ஒரு தமிழ் அரசியல்வாதியாவது மதம் மாறியதுண்டா? எந்த ஓர் அரசியல்வாதியாவது, தான் வழமையாக அணிந்து வந்த ஆடையை மாற்றியதுண்டா, தனது பெயரை மாற்றியதுண்டா, உறவுகளை மாற்றியதுண்டா, கலப்பு மணம் புரிந்தது உண்டா, தன் வழமையான கையெழுத்தைத்தான் மாற்றியதுண்டா.*


*டொன் ஸ் ரீபன் சேநாயக்கா தொடக்கம் சொலமன் வில்லியம் றிஜ்வே டயஸ் பண்டாரநாயக்க, ஜூனியஸ் றிச்சட் ஜெயவர்த்தன ஈறாக இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை இதில் அடக்கமானவர்களே.*

*ஆனால், நாடு கையறு நிலையில் இருந்த போது இந்த நாட்டின் ஜனநாயகப் பெருமைகளைக் காப்பாற்றுவதற்காக, பாராளுமன்றத்தின் மாண்பை காப்பாற்றுவதற்காக, ஜனநாயக விரோத சட்டங்களைத் தோலுரித்துக் காட்டுவதற்காக நடவடிக்கை எடுத்தவர்கள், தமிழர்களும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுமே என்பதை நான் இந்த உயரிய சபையில் உரத்துப் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன.*

*இறுதியாக 22ஆவது திருத்தம் குறித்து இரண்டு விடயங்களைக் கூற விரும்புகின்றேன். இதற்கு நாங்கள் இதற்கு வாக்களிகளிப்பதா இல்லையா என்பதைச் சிந்திப்பதற்காக, இந்த அரசாங்கம் 8 அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்றது. அதைவிட இரட்டைப் பிரஜா உரிமையில் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கப்பட்டவன் நான். அதைக் கொண்டு வருவதை மீண்டும் வெறுக்கின்றேன்.*

*(ஐ-06)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# சிறந்த சிறுவர் நலமேம்பாட்டாளர் ஒருவர் பற்றியது

பகிர்வு -52

**கணபதி சர்வானந்தா**

சிறுவர்களை வலுவூட்டுவதன் மூலம் அவர்கள் பாதுகாப்பை உறுதி செய்தல். எதிர்காலத் தலைமைத்துவத்துக்குரிய ஆளுமைகளாக அவர்களை உருவாக்குதல், ஆன்மிக ஒழுக்கத்தைப் பேணுபவர்களாக அவர்களை அறிவூட்டல், அவர்களிடத்தே நல்ல விடயத்தைக் காணும்போது அதனைச் சுட்டிக்காட்டி அவர்களை அது தொடர்பில் மேலும் ஊக்குவித்தல், தம்மை நல்ல மனிதர்களாக வாழ வழிகாட்டுபவர்களிடத்தே நன்றி பாராட்டுதல், பிறருக்கு விருப்போடு உதவுதல், சமூகத்தின் மீது அக்கறைகொண்ட மனிதர்களாக வாழ வழி சமைத்தல் போன்ற பல விடயங்களை முக்கியமான நோக்கங்களாகக் கொண்டு ஒரு சிறுவர் கழகத்தை உருவாக்கி அதனைச் செவ்வனே நடத்தி வருகிறார் திருமதி.கவிதாமலர் சுதேஸ்வரன்.அதற்குச் “சுன்னாகம் சிவன் சிறுவர் கழகம்” எனப்பெயரிட்டு அதனை முறைப்படி பதிவு செய்திருக்கிறார். அதில் நூறுக்கு மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக இருப்பதைக் கண்டேன்.

இத்தனைக்கும் அவர் சிறுவர் தொடர்பான கற்கைப் பின்புலத்தைக் கொண்டவரல்ல. அத்தோடு சிறுவர் உளநல வளமேம்பாடு தொடர்பாகக் கற்றவரைத் துணையாகக் கொண்டவருமல்ல. ஒரு சாதாரண குடும்பத்தின் தலைவியாகவே அவர் காணப்படுகிறார். சிறுவர் தொடர்பானதொரு சஞ்சிகையை நடத்தி வருபவன் என்ற வகையில், சிறுவர்கள் மீது அக்கறைகொண்ட அவரை நான் சந்தித்தேன். முதல் சந்திப்பில் அவரைப் பார்த்தபோது, அவரது சிறுவர் தொடர்பான நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்தபோது அவர் சிறுவர் நலம் பேணும் ஒரு துறை சார்ந்த உத்தியோகத்தராக இருக்கலாம்என்று தான்எண்ணிக் கொண்டேன். ஏனெனில் சிறுவர்கள் நலன் பேணும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் என்னத்தை வலியுறுத்துகி றதோ, அதனை அவர் அந்தக் கழகத்தின் திட்டங்களாக வடிவமைத்திருந்தார். அவற்றை நடைமுறைப்படுத்தியும் வருகிறார். அரச நிறுவனங்களில் பணியாற்றும் சிறுவர் நலன் பேணும் ஒரு அதிகாரி செய்ய வேண்டிய அல்லது முன்னெடுக்க வேண்டிய பணிகளை விடச் சிறப்பாக அவர் செயற்திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

இடைவிடாத சந்திப்புகளை ஏற்படுத்துகிறார். அந்தச் சந்திப்புகளில் சிறுவர் ஆளுமையை அதிகரிக்கக் கூடிய வளவாளர்களை வரவழைக்கிறார். அவர்களைக் கழகச் சிறுவர்கள் சந்திக்கின்றனர். அச் சிறுவர்களை மேன்மேலும் வலுவூட்டுமாறு அச் சந்திப்புகள் வடிவமைக்கப்படுவதை அவர் உறுதிப்படுத்திக் கொள்ளுகிறார். இது போன்ற பல நடவடிக்கைகள் அங்கே தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. கல்விக்கு அப்பால் வாழ்வை வளமாக்க எவை வேண்டுமோ, அத்தனை விடயங்களும் அங்கே போதனைகளாக மட்டுமல்ல செயற்திட்டங்களாகவும் நடைபெறுவதைக் கண்டேன்.

குறிப்பாகக் கடந்த 21.10.2022 அன்று “கலங்கரை” ஆண்டிதழ் – 3 இன் வெளியீடு சுன்னாகம் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. சிவன் சிறுவர் கழகத்தால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் சஞ்சிகை அது. அந்தச் சிறுவர்கழக அங்கத்தவர்களின் படைப்புகளோடு அவர்களை வளப்படுத்துகின்ற பல விடயங்களையும் தகவல்களை யும் உள்ளடக்கியதாக, வர்ண அட்டையுடன் ஏ-5 அளவில் வடிவமைக்கப்பட்ட 52 பக்கங்களைக் கொண்டதாக அவ்விதழ் காணப்படுகிறது. அதன் ஆசிரியர் திருமதி.கவிதாமலர் சுதேஸ்வரன்.

சமூகத்தின்மேல் கொண்ட அக்கறையை மட்டும் தனது முதலீடாகக் கொண்டு அக் கழகத்தை திருமதி.கவிதாமலர் சுதேஸ்வரன் அவர்கள் நடத்திவருகிறார். அங்கு நடைபெறுகின்ற மேற்படி விடயங்கள் என்னைப் பலவாறு சிந்திக்கச் செய்தது. அது தொடர்பான துறை சார்ந்த அதிகாரிகளாக இருப்பவர்கள் தமக்கிருக்கின்ற அதிகாரங்களைப் பாவித்து இதைவிடச் சிறந்ததாகப் பல கழகங்களை தமது அதிகாரத்துக்குட்பட்ட எல்லைக்குள் உருவாக்கலாம். அதற்கான செயற்திட்டங்களை வகுக்கலாம். அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தலாம். ஏன் அவர்கள் அதனைச் செய்வதில்லை? அவர்கள் அதிகாரிகளாக மட்டுமே இருக்க விரும்புகிறார்களா? அல்லது அவர்கள் சமூக அக்கறையுள்ளவர்களாக இல்லையா?. அப்படி இருக்க அந்தச் சூழ்நிலை அவர்களை அனுமதிக்கவில்லையா? அவர்கள் ஒரு எல்லையைத் தாண்டிச் செல்ல முடியாதவாறு நெருக்கடிகளைக் கொண்டவர்களாக அவர்கள் காணப்படுவது ஏன்? என்ற கேள்விகளால் என்னிதயம் நிரம்பிக் கொள்ளுகின்றது.

அவர்கள் அப்படி இருந்திருந்தால் கிராமங்கள் தோறும் பல சிறுவர் கழகங்கள் பல்கிப் பெருகியிருக்க வேண்டுமே? கேட்டால்“ இது போன்றவைகளுக்குப் பெற்றார்கள் பிள்ளைகளை அனுப்புவதில்லை. சிறுவர்கள் வாசிக்க விரும்புகிறார்கள் இல்லை, சிறுவர்கள் விளையாட்டில் அக்கறை இல்லை. புதிய தொழில்நுட்பம் அவர்கள் கவனத்தைத் திசை திருப்புகிறது.” போன்ற கருத்துகளைத் தெரிவித்துவிட்டு அதனின்றும் தப்பிக் கொள்ளுகிறார்கள்.

விரிவாகிக் கொண்டிருக்கும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்குள் சிறுவர்கள் சிக்கிக் கொள்வதாகச் சொல்லப்படுவது உண்மையாக இருக்கட்டும். அச் சிறுவர்களை அதற்கு எதிராகச் சிந்தித்துச் செயலாற்ற இவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்களை அறிவூட்ட, அதற்கெதிராகச் செயலாற்ற அது பற்றிய விழிப்புணர்வைச் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதனைச் செய்தார்களா? அல்லது அது தொடர்பாகத் திட்டங்களை வகுத்தார்களா? என்றால் ஆம் என்று தான் பதிலளிப்பார்கள். ஏனெனில் அதற்குத் துணைசேர்க்க அவர்களிடம் அது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட கோப்புகள் பல இருக்கும். எழுத்து வடிவத்தில் இருக்கும். அவை எவ்வளவு தூரம் செயற்திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டன என்பது கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயம்?

சிறுவர் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அது தொடர்பான உத்தியோகத்தர்கள் தமது அதிகார எல்லைக்குள் நின்றுவிடாது சற்று வெளியே வந்து சமூகத்தின் பங்காளிகளாக மாற வேண்டும். அது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் திருமதி.கவிதாமலர் சுதேஸ்வரன் போன்ற பலர் இருப்பதை இனங்காண முடியும். அவர்களை இனங்கண்டு ஊக்குவிப்பதன் மூலம் பல சிறுவர்களை வலுவூட்டலாம். சிறுவர்கள் நலன் வளர்ச்சி பெற்றால் சமூகம் வலுப்பெறும் என்பதே உண்மை.

# இந்தவார ராசிபலன் 23.10.2022 - 29.10.2022



**ஒக்ரோபர் 23 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - ஐப்பசி 06**

**நல்ல நேரம்: 7.30 - 9.00** **ராகு காலம் : 04.30 - 06.00** **திதி : திரையோதசி**

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உங்கள் ஆற்றல் வெளிப்படும். சிந்தித்து செயல்பட்டு லாபம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிக்கேற்ற லாபம் உண்டாகும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். பகைவர் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். செயல்களில் சிரமம் ஏற்படும். எதிர்பார்ப்பு நிறைவேறும். பழைய கடன் அடைபடும். திட்டமிட்டு செயல்பட நன்மை ஏற்படும்.தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ஆதாயம் அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றியாகும்.நினைத்ததை அடையும் வாரம் இது. அரசு வழியில் இழுபறியாக இருந்த வேலைகளை முடிப்பீர்கள். எதிர்ப்பு விலகும். புதிய முயற்சி ஆதாயம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் புதிய வரவு உண்டாகும். புதிய இடம் வாங்கும் முயற்சி பலிதமாகும். அரசு ஊழியர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானம் கூடும்.மனவலிமை அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் நிறைவேறும். முயற்சி வெற்றியாகும். பணத்தடைகள் அகலும். எதிர்பார்த்தவற்றில் நன்மை காண முடியும்.எண்ணம் எளிதாக நிறைவேறும். தீராமல் இருந்த பிரச்னைகளில் தீர்வு ஏற்படும். பொருளாதாரம் உயரும். பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

திறமை வெளிப்படும். கவனமுடன் செயல்பட்டு தேவைகளை அடைவீர்கள். எண்ணம் நிறைவேற ஆரம்பிக்கும்.குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் வெற்றி காண்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள்.எதிர்பார்த்த வருவாய் ஏற்படும். தனித்தன்மை வெளிப்படும் வாரம் இது. நினைத்ததை அடைவீர்கள். செயல்கள் வெற்றியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

விருப்பம் நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். முயற்சி நிறைவேறும். துணிவுடன் செயல்பட்டு லாபம் காண்பீர்கள். எண்ணம் எளிதாக நிறைவேறும். உடல்நிலையில் இருந்த சங்கடம் தீரும். எதிரிகள் விலகிச் செல்வர். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

அலைச்சல் உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். அரசு வழியில் முயற்சிகள் வெற்றியாகும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். நினைத்ததை அடைவீர்கள். செல்வாக்கு வெளிப்படும். குடும்ப மகிழ்ச்சி கூடும்.விருப்பம் நிறைவேறும். வருமானத் தடை விலகும். முயற்சிக்கேற்ற பலன் உண்டாகும். செலவு அதிகரித்தாலும் அதற்கேற்ப வரவு உண்டாகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தொழிலில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். விருப்பம் நிறைவேறும். வேலை குறித்த முயற்சி பலிதமாகும். வருமானத்தடை விலகும். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும். தடுமாற்றம் உண்டாகலாம் என்பதால் செயலில் கவனம் தேவை. நெருக்கடி விலகும். அரசு வழியில் நன்மை அதிகரிக்கும். குடும்பத்தில் சலசலப்பு ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும்.நினைத்ததை அடையும் வாரம். முயற்சியில் இருந்த தடை விலகும். எதிரிகள் உங்களை விட்டு விலகிச் செல்வர். சுறுசுறுப்பாக செயல்பட்டு உங்கள் செல்வாக்கை நிரூபிப்பீர்கள். பணவிஷயத்தில் கவனம் தேவை.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எண்ணம் நிறைவேறும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பணியில் ஏற்பட்ட பிரச்னை விலகும். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும். வரவேண்டிய பணம் வந்து சேரும். உறவினரால் நன்மை ஏற்படும். செயலில் கவனம் தேவை. முயற்சி வெற்றியடையும் வாரம் இது. அரசு வழியில் ஆதாயம் கூடும். பொருளாதார நெருக்கடி விலகும். சொத்துப் பிரச்னை தீரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நெருக்கடிகள் இருக்கும். மனமும் உடலும் சோர்வடையும், அதன்பின் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னை விலகும். பண வரவு அதிகரிக்கும். விலகிச் சென்றவர்கள் மீண்டும் தேடி வருவர். உங்கள் நிலை உயரும். செல்வாக்கு வெளிப்படும். தடைகளைத் தாண்டி நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். செயலில் கவனம் தேவை.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

முயற்சிகள் நிறைவேறும். அரசு வழியில் ஆதரவு கூடும். தடைகளை சந்திப்பீர்கள். அதன்பின் சுறுசுறுப்பாக செயல்பட்டு லாபம் காண்பீர்கள். விருப்பம் நிறைவேறும். எதிர்ப்பு மறையும். வழக்கு சாதகமாகும். வருமானம் அதிகரிக்கும். பயணம், பணத்தில் எச்சரிக்கை தேவை. நினைத்ததை நினைத்தபடி அடைவீர்கள். சொத்துப் பிரச்னை தீரும். பணியில் நெருக்கடி மறையும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

நினைத்ததை சாதிப்பீர்கள். நீங்கள் ஈடுபடும் முயற்சி வெற்றி பெறும். குழப்பம் அதிகரிக்கும். கோபம் வெளிப்படும். உடல்நலக் குறைவு ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. பேச்சில் நிதானம் அவசியம். தடை உண்டாகும். குழப்பம் வரலாம். செயலில் கவனம் தேவை. திட்டமிட்டு செயல்படுவீர்கள். எதிர்ப்பை சமாளிப்பீர்கள் என்றாலும் குடும்பத்தில் சச்சரவு உண்டாகும். சிரமங்கள் அதிகரிக்கலாம் கவனம் தேவை.

# ‘வட இலங்கையில் அதிகரிக்கும் சீன நடமாட்டம்’! ‘இந்து’ நாளிதழின் செய்தி உண்மையானதா?



சென்னை மடல்
-பகவான் சிங்-

உங்களுக்கு என் கொழும்பு நண்பர் சுதனை நினைவிருக்கலாம். சில வாரங்களுக்கு முன்பு அவரோடு, அன்பைப் பற்றியும் ஒற்றுமையைப் பற்றியும் நடத்திய உரையாடல் குறித்து உங்களிடம் பகிர்ந்து கொண்டேன். “ஈழத் தமிழன் ஒன்றுசேர மாட்டான். நாங்கள் சோழர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். சண்டை பிடித்துக்கொண்டுதான் இருப்போம். எங்களைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்றால், ஒரு பெரிய தடி இருந்தால்தான் முடியும். பிரபாகரன் அதைத்தான் செய்தார். இப்போது அவர் இல்லை, இணக்கம் இயலாது”. சுதனின் அறிவார்ந்த இந்தச் சொற்களை மீண்டும் இப்போது நினைவுக்குக் கொண்டுவந்தது அவரின் கைப்பேசி அழைப்பு. “இந்து நாளிதழைப் பார்த்தீர்களா?” என்று ஆரம்பித்தார் அவர். “தினமும்தான் படிக்கிறேன், என்ன விஷயம்?” என்று நான் கேட்டேன். “இல்லை அங்கிள், அதில் ஒரு செய்தி வந்திருக்கிறது. நீங்கள் விசாரித்து எனக்கு அது உண்மையா என்று தெளிவுபடுத்த வேண்டும்” - சுதனின் ஆணை.

ஒக்ரோபர் 18 அன்று வெளியான ‘இந்து’ செய்தி, தென் தமிழகக் கடலோரப்பகுதியிலிருந்து விசைப் படகு மூலம் அரை மணி நேரப் பயண தூரத்தில் இருக்கும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் சீன இராணுவத்தினரின் நடமாட்டம் குறித்து தமிழக அரசும் காவல் துறையும் கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கிறது. இலங்கையைச் சேர்ந்த ஓர் அரசியல் கட்சித் தொண்டர்களின் உதவியுடன் சீனர்கள் இரகசியமாகப் படகுகளின் மூலம், தமிழகத்திற்குள் நுழைந்ததாக, மாநில உளவுத் துறை, அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக அந்தச் செய்தி குறிப்பிடுகிறது. இதை நான் நம்புவதற்குத் தகுந்த காரணமும் உள்ளது. மீனவர்கள் மற்றும் இதர கடலோர சமூகத்தினரிடையே காவல் துறைக்கு இரகசியத் தகவலளிக்கும் நபர்களின் ஒரு வலுவான வலையம் உள்ளது. எனவே, ஒரு வெளியாள், குறிப்பாக, வெள்ளைத் தோலுடனும் சீனர்களின் உடல் அம்சங்களுடனும் அவர்களுக்குத் தெரியாமல் கடலோரத்தில் ஊடுருவுவதென்பது சிரமமானதுதான், என்றாலும், இந்த ‘உளவு சொல்பவர்கள்’ மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினர் மத்தியிலும் ஊழல் பெருமளவு பரவிக் கிடப்பதால், கடலோர ஊடுருவல் சாத்தியமாகிறது. இலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சி ஒன்றின் தொண்டர்கள் உதவியுடன் சீனர்கள் இரகசியமாகத் தமிழகத்தில் நுழைந்தது குறித்து மாநில உளவுத் துறை, அரசுக்கு எச்சரிக்கை அனுப்பியுள்ளது குறித்த இந்து நாளிதழ் செய்திக்கு இதுதான் காரணமாக இருக்கும். சீனர்கள் தமிழகத்தில் ஊடுருவ உதவும் இந்த இலங்கை அரசியல் கட்சி எது என்பதை என்னால் ஓரளவுக்குத் துல்லியமாகக் கணிக்க முடியும். இந்தக் கட்சி, தமிழகக் காவல் துறை உள்ளிட்ட கடலோர மக்கள் உதவியுடன், தங்கள் ஆயுதங்களையும் இதர ஈழப் போர் தளவாடங்களையும் கடல் கடந்து தமிழகத்திலிருந்து கடத்திய கடந்த கால அனுபவம் கொண்டதால், இந்த இரகசியச் செயல்பாடு சாத்தியமாகியிருக்கலாம். ஊடுருவும் இந்தச் சீன தேசத்தவர்கள் யாரென்பது குறித்தும் எனக்கு ஒரு கணிப்பு உள்ளது. இவர்கள் படகுச் சவாரி செய்து, தமிழகத்தின் எழிலைக் கண்டு களிக்க வரும் வெறும் சுற்றுலாப் பயணிகள் இல்லை.

முல்லைத்தீவு, பருத்தித்தீவு, அனலைதீவு, மீசாலை, சாவகச்சேரி போன்ற வட இலங்கைப் பகுதிகளில் சீனர்களின் சுதந்திரமான நடமாட்டம், தமிழ் மீனவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அந்தச் செய்தி குறிப்பிடுகிறது. தங்களின் ஒரே வாழ்வாதாரமான கடல் வளத்தைச் சீனர்கள் கொள்ளையடிப்பதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்தச் சூழலால் இலங்கை மக்களிடையே ஒரு பிரிவினை ஏற்படக்கூடும் என்றும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களின் மீதான இந்தியாவின் செல்வாக்கைக் குறைக்கும் என்றும் உள்ளூர்த் தமிழர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. இந்து நாளிதழின் இந்தச் செய்தி குறித்த என் கருத்து:

அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் சீனக் கையூட்டுகளினால், கடந்த சில ஆண்டுகளாக சீனா, இலங்கையில் செய்துவரும் பெரு முதலீடுகளின் தொடர்ச்சியாக, சீனர்களின் நடமாட்டம், பெரும்பாலான உள்ளூர்த் தமிழர்களால் இயல்பானதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. சீன ஊடுருவலால் பிரிவினை ஏற்படும் என்ற தமிழர்களின் அச்சம் குறித்துக் கூறவேண்டுமானால், ஏற்கெனவே வெளிப்படையாக, வேதனையான பிரிவினைகளுடன் வாழும் இவர்களை மேலும் எப்படிப் பிரித்துவிட டியும்? என் இனிய ஈழத்தில், பிரபாகரனுக்குப் பிறகு நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்து, வேதனையுடன்தான் நான் இதையெல்லாம் சொல்கிறேன்.

வட இலங்கையில் சீன இராணுவ நடமாட்டம் குறித்த எச்சரிக்கையைத் தொடர்ந்து, தமிழகக் காவல் துறை தனது கடலோர பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளதாகவும், இலங்கையில் சீனர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பது மறுக்கமுடியாத உண்மை என்று தமிழகக் கடலோரப் பாதுகாப்புக் குழுத் தலைவர் சந்தீப் மித்தல் கூறியுள்ளதாகவும் அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கிறது. சர்வதேச கடலோர எல்லைக் கோட்டுக்கு அருகில் உள்ள தீவுகளுக்குச் சீனத் தூதர் அடிக்கடி வருவதும், கடல் அட்டை (sea cucumner) என்னும் உயிரினத்தின் வளர்ப்புக்கான வாய்ப்பு குறித்த ஆய்வு என்ற போர்வையில் இப்பகுதி யில் ‘ட்ரோன் சேர்வே’ செய்யப்படுவதும் சந்தேகங் களை எழுப்புவதாகவும், இந்தியாவில் இளங்கலைப் பட்டப்படிப்பு படிக்கும் இலங்கை மாணவர்களுக்கு இந்தியா உதவித்தொகை வழங்கிவரும் நிலையில், இலங்கையில் முதுகலைப் பட்டப் படிப்பு படிக்கும் இலங்கை மாணவர்களுக்கு சீனா உதவித் தொகை வழங்கி வருவதாகவும் மித்தல் மேலும் கூறியுள்ளார். இலங்கைத் தீவில் தனது எதிர்காலத் திட்டங்களுக்கு இளைஞர் களின் ஆதரவைத் தேட சீனா இது போல முதலீடுகளைச் செய்து முயல்கி றது என்றும் அந்தக் காவல் துறை அதிகாரி கூறியதாக அந்தச் செய்தி குறிப்பிடுகிறது.

## இந்தியாவின் போர்க்களமாக தமிழகத்தை மாற்றும் அறைகூவல்!



‘இந்து’வின் இந்தச் செய்தி குறித்து விசாரிக்க நண்பர் சுதன் ஆணையிட் டதில் எனக்கு அதிக வியப்பும் சற்று எரிச்சலும் உண்டானது. அந்தச் செய்தியைப்பற்றி என்னிடம் கூறும்போது, அவர் மனதுக்குள் மகிழ்ச்சி பதுங்கியிருந்ததை என்னால் கணிக்க முடிந்தது. எங்களது முந்தைய தொலைபேசி உரையாடலின்போது, சீனாவின் ஆதிக்கத்துக்கு இலங்கை ஆட்படுவது குறித்து இந்தியா கவலை கொள்ளத் தேவையில்லை என்றும், தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ள இலங்கை மக்களுக்குத் தெரியும் என்றும் சுதன் கூறியதும் எனக்கு நினைவு வந்தது. சுதனின் அந்த உரையாடலுக்கு நான் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததற்குக் காரணம், ‘தங்கள் பிராந்தியத்தில் உருவாகிவரும் புவியரசியல் பதற்றங்கள் குறித்த சரியான புரிதல் இல்லாமல், ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் அறிவு ஜீவிகள் என்று கூறிக்கொள்பவர்களின் சுயநலம் மிகுந்த கருத்துகளால் உந்தப்பட்டுத் தவறாக வழிநடத்தப்படும் இலங்கை இளைஞர்கள் குறித்து, நான் கொண்டுள்ள கவலைதான்’ என்று என் ‘ஈழநாடு’ வாசகர்களுக்கு அந்த என் கட்டுரையிலேயே குறிப்பிட்டிருந்தேன். இப்போது, சுதன் எனக்கு வழங்கியிருக்கும் பொறுப்பு குறித்து நான் வியப்பும் எரிச்சலும் அடைந்துள்ளதையும் அவரிடமே கூறினேன். இந்து நாளிதழில் வெளியான செய்திக்குப் பிறகுதான் சீன நடமாட்டம் குறித்து உங்களுக்குத் தெரியுமா என்றும் நான் அவரிடம் கேட்டேன். ஏனெனில், ஈழப்போர் முடிவடைந்த காலத்திலிருந்தே சீனர்கள் இலங்கை முழுவதும் பரவத் தொடங்கி விட்டனர்.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் கடன் வலையில் சிக்கிய பல நாடுகளைக் கட்டுக்குள் கொண்டுவந்து அடிமையாக்குவதுபோல், இலங்கையையும் கொண்டுவரும் நோக்கில், ஒரு ‘பெரும் தடி’போல் உருவாவதுதான் சீனாவின் செயல்பாடுகள். தமிழர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கொண்டுவரப் பயன்படுத்தப்பட்ட பிரபாகரனின் அந்தத் தடியுடன் இந்தச் சீனத் தடியை ஒப்பிட முடியாது என்றும் நான் அவரிடம் கூறினேன். சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்துச் சுதந்தரம்பெற உருவான ஈழப்போர் போல சீனர்கள் ஆதிக்கம் செலுத்தினால், தமிழர்களிடையே அப்படி ஓர் எதிர்ப்பு இருக்காது என்பதையும் நான் சுதனுக்கு நினைவு படுத்தினேன். அப்படி ஒரு துக்ககரமான நிகழ்வைத் தவிர்க்க இன்னும் காலம் கடந்து விடவில்லை என்றும் கூறினேன். “சரி அங்கிள், பிறகு பேசலாம்” என்று கூறி, அவர் இணைப்பைத் துண்டித்துவிட்டார்.

இந்தச் சிறு தீவில் சீனாவின் ஆதிக்கம் குறித்த எச்சரிக்கையை நான் பலமுறை என் ‘ஈழநாடு’ வாசகர்களுக்கு விடுத்துள்ளேன்.

இலங்கையின் ஒவ்வொரு துறையின் செயல்பாட்டிலும் மாபெரும் முதலீடுகளையும் உள்கட்டமைப்பையும் உருவாக்கியுள்ள சீனா, அந்த நிறுவனங்களை நடத்தப் பணியமர்த்தப்பட்டுள்ள தனது நாட்டுப் பிரஜைகளையும் அமைப்புகளையும் காக்கும் சாக்கில், தனது துருப்புகளை நிறுத்துவது இயல்பாகவே பார்க்கப்படும். ஆனால், அது இலங்கை மக்களை அடிமைப்படுத்தும் நடவடிக்கையின் தொடக்கமாக இருக்கும். மேலும், வட இலங்கையுடன் கடல் எல்லையைப் பகிரும் தமிழ கத்தை, இந்தியாவின் போர்க்களமாக மாற்றுவதற்கான அறைகூவலாகவும் இது இருக்கும்.

சொல்ல மறந்துவிட்டேன். சீனத் தூதர் க்வி, கடந்த டிசம்பரில் யாழ் பயணத்தின்போது, மூன்றாம் திட்டுக்குப் படகில் சென்று ட்ரோன் மூலம் இந்தியாவை நோக்கி வீடியோ எடுத்து, ‘இதுதான் தொடக்கம்’ என்று கூறியதை சுதனுக்கு நினைவு படுத்தியிருக்க வேண்டாமா? க்வியின் போர் கூவல் டில்லியைக் கதிகலங்க வைத்ததென்று பேசப்பட்டது, இன்று நான், இந்த உரையாடலை என் இனிய ஈழநாடு நண்பர்களிடம் தொடங்கும்போது மூன்று விஷயங்கள் மனதில் நின்றன. சீன ஆக்கிரமிப்புடன், இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸில் நடந்த தலைவர் தேர்தல் என்கிற ஒரு கூத்து நாடகமும், தமிழகத்தில் ஜெயலலிதாவின் மறைவுக்கு அவரின் உயிர்த் தோழி சசிகலா பொறுப்பு என்று நீதியரசர் ஆறுமுகசாமி அறிவித்ததைப் பற்றியும் உங்களிடம் பேசலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், உங்களின் நேரத்தையும் செய்தித் தாளின் இடத்தையும் எனது சீனப் புலம்பல் கபளீகரம் செய்ததால், இத்துடன் இந்த உரையாடலை முடிக்கிறேன்.

நம் ஆசிரியர் அநுசரணையில், அந்த மற்ற இரண்டு விஷயங்களுடன் உங்களைத் திங்களன்று சந்திப்பேன்.

ஈழநாடு நண்பர்களுக்கு எனது மனம் நிறைந்த இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்! வணக்கம்.

# 13 வது திருத்தத்தின்

## கடந்த காலமும் எதிர்காலமும்

**திருத்தத்தை மீள்பேச்சு வார்த்தைக்கு உட்படுத்தி புதிய உடன்படிக்கையொன்றை செய்யவேண்டும் என்று இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கடந்தவாரம் தெரிவித்த**



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட புதுடில்லியில் பதவி யேற்பதற்கு கடந்த வருட பிற்பகுதியில் செல்வதற்கு சில மாதங்கள் முன்னதாக இரு நாடுகளுக்கும் இடையிலான உற வுகளை வளர்ப்பதற்கான ஒரு " செயற் திட்ட நகர்வு வரைவு" ஒன்றை அன் றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் சவிடம் கையளித்தார். இரு தரப்பு உறவுகளை "பரஸ்பரம் தங்கியிருத்தல், மதிப்பு மற்றும் நேசம் ஆகிய பண்பு களின் அடிப்படையில்" விசேடமான ஒன்றாக வளர்ப்பதே அவரின் நோக்கமாக இருப்பதாக கூறப்பட்டது.

மொரகொடவின் வழிகாட்டலில் புதுடில்லியில் உள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் நிலூகா கதுருக முவ தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்ட அந்த செயற்திட்ட நகர்வு வரைவின் தலைப்பு "இந்தியா வில் உள்ள இலங்கை இராஜதந்திர பணியகங்களுக்கான ஒருங்கிணைந்த தந்திரோபாயம்" என்பதாகும்.

கோட்டாபயவிடம் அந்த வரைவு கையளிக்கப்பட்ட போதிலும் அதை அன்றைய அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொண்டதா அல்லது அதன் பிரகாரம் தான் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வளர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றனவா என்பது தெரியவில்லை. அத்துடன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொரகொடவின் தந்திரோபாயம் குறித்து எத்தகைய அபிப்பிராயத்தை கொண்டிருக்கிறார் என்பதும் தெரியவில்லை.

ஆனால், அண்மைக்காலத்தில் இந் தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானி கர்களாக பதவி வகித்தவர்களில் மொரகொட அந்த நாட்டில் மத்திய அரசுடன் நின்றுவிடாமல் பரவலாக மாநில மட்டங்களிலும் பல்வேறு தரப்புகளுடனும் நிறுவனங்களுடனும் கூடுதலான அளவுக்கு ஊடாட்டங்க ளைச் செய்வதில் ஆர்வம் காட்டுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்ரா லினை மொரகொட இதுவரையில் இரு தடவைகள் சந்தித்து நல்லெண் ணங்களை பகிர்ந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய ஊடகங்களுடனும் அவர் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டிருக்கிறார் போன்று தெரி கிறது. இந்தியாவில் அவர் கலந்து கொள்ளும் வைபவங்களுக்கு, நிகழ்த் துகின்ற உரைகளுக்கு, வழங்குகின்ற நேர்காணல்களுக்கு ஊடகங்கள் முக்கி யத்துவம் கொடுப்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

கடந்த வாரமும் (அக்.17) உயர்ஸ் தானிகர் மொரகொட ரைம்ஸ் ஒஃப் இந்தியா பத்திரிகைக்கு ஒரு நேர்கா ணலை வழங்கியிருந்தார். அது முதல் பக்க தலைப்புச் செய்தியாக வெளியி டப்பட்டது. அதில் அவர் இந்தியா வின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு செயற்பாட்டுக்கும் இலங்கை இடம் கொடுக்காது என்று தெரிவித்த கருத்துக்கே பெரு முக்கி யத்துவம் கொடுக்கப்பட்டது. அந்த நேர்காணலை மறுபிரசுரம் செய்த இலங்கை ஊடகங்களும் அதே பாது காப்பு அம்சத்துக்கே அழுத்தத்தை கொடுத்தன.

இரு தரப்பு உடன்படிக்கைகளுக்கு ஏற்ப இந்தியாவின் நலன்களுக்கு பாத கமான முறையில் எந்தவொரு வெளி நாடும் துறைமுகங்களைப் பயன்படுத்த இலங்கை அனுமதிக்கப்போவதில்லை என்று இந்திய அரசாங்கத்துக்கு மீள உறுதிப்படுத்த அந்த நேர்காணலை பயன்படுத்திக்கொண்ட உயர்ஸ்தானி கர், "எமது பாதுகாப்பு அக்கறைகள் முற்றிலும் ஒன்றாகவே இருக்கின்றன. இந்தியாவுக்கு வருகின்ற எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இலங் கைக்கு வருகின்ற பாதுகாப்பு அச்சுறுத் தலே என்ற எமது நம்பிக்கையே அடிப் படைக் கோட்பாடாகும். இந்தியாவும் அவ்வாறே நினைக்கிறது என்று நாம் கருதுகிறோம்" என்று குறிப்பிட்டார்.

பாரிய கடன் நெருக்கடியில் சிக்கியி ருக்கும் இலங்கையின் "நிலைபேறான" பொருளாதார மீட்சிக்கு இந்தியா முக்கி யமானது என்று கூறிய மொரகொட, இந்தியாவுடன் முடிச்சுப்போட்டு இலங்கையை பிணைத்துக்கொள்ள தங்களால் முடியுமாக இருந்தால், இந் தியா நகரும்போது தங்களாலும் நகரக் கூடியதாக இருக்கும் என்று பொருளா தாரப் பிணைப்பொன்றை இரு நாடுக ளுக்கும் இடையில் ஏற்படுத்த வேண் டும் என்ற அக்கறையையும் வெளியிட் டார்.



பாதுகாப்பு, பொருளாதாரம் மற் றும் கலாசாரம் ஆகிய துறைகளில் இந்தியாவுடன் சேர்ந்து செயற்படுவது பற்றிய இலங்கை அரசியல் தலைவர்க ளினதோ அல்லது இராஜதந்திரிகளி னதோ கருத்துக்கள் வழமையானவை. அதுவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்தியா அண் மைய மாதங்களாக வழங்கிய அவசர உதவிகளின் பின்புலத்தில் அவை தவிர்க்கமுடியாதவையும் கூட.

ஆனால், இந்த கட்டுரையாளரைப் பொறுத்தவரை, 1987 ஜூலை 29 இந் திய -- இலங்கை சமாதான உடன்படிக் கையை அடுத்து மாகாணசபைகளை உருவாக்குவதற்காக கொண்டுவரப் பட்ட அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் குறித்த மொரகொடவின் கருத்தே கவனத்தை தூண்டுவதாக இருந்தது. ஈழநாடு பத்திரிகை அதற்கு முதல்பக்க தலைப்புச் செய்தி முக்கி யத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந் தது.

13 வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு அதிகாரப்பரவ லாக்கத்தை செய்து தமிழர் பிரச்சினை தொடர்பிலான தனது கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு இலங்கை போது மான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அண்மையில் ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா விசனம் வெளியிட்ட பின் புலத்தில் 13வது திருத்தம் பற்றிய மொர கொடவின் கருத்து ஒரு சர்ச்சைக்குரி யதாக அமைகிறது எனலாம்.

"ஜெனீவாவில் இந்தியா கூறியதில் புதிதாக எதுவுமில்லை. இந்தியா அதன் அக்கறையை வெளிப்படுத்திய முறை யில் மாற்றம் இருந்திருக்கக்கூடும். ஆனால், சாராம்சத்தில் இந்தியா இடை யறாது ஒன்றையே கூறிவந்திருக்கிறது. அரசியல் ரீதியில் இலங்கை ஒரு நிலை மாறு கட்டத்தில் இருக்கிறது. எமது நாட்டில் சமூக மற்றும் அரசியல் உடன் பாடுகளை மீளப்பேச்சு வார்த்தைக்கு உட்படுத்தவேண்டிய தேவை இருக்கி றது. இலங்கை பல மதங்கள், இனங்க ளைக் கொண்ட சிக்கலான நாடு. 13 வது திருத்தமும் மீள் பேச்சு வார்த்தைக்கு உட் படுத்தவேண்டிய வகைக்குள்ளேயே வருகிறது. நாம் புதிய ஒரு உடன் படிக் கையை செய்ய வேண்டியிருக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்த கருத்து மொரகொடவிட மிருந்து வந்திருப்பதால் அதற்கு கூடுதல் முக்கியத்துவம் ஒன்று இருக்கிறது. ஏனென்றால் இந்தியாவுக்கு உயர்ஸ்தா னிகராக செல்வதற்கு முன்னர் அவர் 13வது திருத்தமும் மாகாண சபைகளும் தேவையற்றவை என்றும் மாவட்ட மட் டத்தில் அதிகாரப்பரவலாக்கத்தை செய்யவேண்டும் என்றும் கடுமையாக வலியுறுதியவர். மாகாண சபைகளுக்கு 13 வது திருத்தத்தின் பிரகாரம் அதிகா ரங்களைப் பரவலாக்க வேண்டும் என்று கொழும்பை வலியுறுத்திக் கொண்டி ருக்கின்ற ஒரு நாட்டுக்கு இலங்கையின் உயர்ஸ்தானிகராக போகிறவர் இந்த பிரச்சினையில் முரண்பாடான கருத்தை முன்வைத்திருக்கிறார் என்று அந்த நேரத்தில் அவதானிகள் சுட்டிக்காட் டவும் செய்தனர்.

ஆனால், இந்தியாவில் பதவியேற்ற பிறகு மாகாணசபைகளுக்கு எதிரான தனது கருத்தை மொரகொட தொடர்ந்து வலியுறுத்தியதாக தெரியவர வில்லை. அதேவேளை, அந்த கருத்தை அவர் மாற்றிக்கொண்டதற்கான அறிகுறியும் தென்பட்டதாக இல்லை.


அரசியல் ரீதியில் நிலை மாறு கட் டத்தில் இருப்பதாக அவர் கூறும் இலங்கையில் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த வேண்டியதாக 13 வது திருத்தமும் இருக்கிறது என்று கருதுகி றார் என்றால் தனது நிலைப்பாட்டுக்கு ஏற்ற முறையில் மாகாணசபைகளை இல்லாமல் செய்து மாவட்ட மட்டத் தில் அதிகார பரவலாக்கத்தை செய்வ தற்காக மீள் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என்பதா அதன் உண் மையான அர்த்தம்? அவரிடமிருந்தே அதற்கான விளக்கம் வரவேண்டும்.



(09 ஆம் பக்கம் பார்க்க...)

# வாழ்வின் யதார்த்தம் சித்திரித்த தெளிவத்தை ஜோசப்

**ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், 2013 ஆம் ஆண்டுக்கான விஷ்ணுபுரம் விருது பெற்றவருமான தெளிவத்தை ஜோசப் சில ஆண்டுகளாக உடல் நிலை நலிந்திருந்தார். கடந்த வெள்ளியன்று (21- 10-2022) காலமானார். அவர் விஷ்ணுபுரம் விருதுபெற்றபொது நோயல் நடேசன் எழுதிய குறிப்பிலிருந்து ஒரு பகுதியை அவர் நினைவாக இங்கே பிரசுரிக்கின்றோம் – ஆசிரியர்.**



**நோயல் நடேசன்**

தமிழில் குறிப்பிட்ட சில எழுத்தாளர்களின் படைப்புகளே சர்வதேசத்தன்மையானவை. இலங்கைத்தமிழ் இலக்கியச்சூழலில் அவ்வகையான எழுத்தாளர்களில் ஒருவர் தெளிவத்தை ஜோசப். இலங்கை மலைநாட்டு தமிழர் பற்றிய ஆக்க இலக்கியப்படைப்புகளை எழுதும்போது அவர்களின் வட்டார மொழியை ஆடம்பரமற்ற எளிமையான மொழியில் சொல்வதுதான் அவரது வழக்கம். ஆனால் அவரது படைப்பின் அடிநாதமாக இருப்பது எந்த நாட்டு மனிதர்களுக்கும் பொருந்தும் சாதாரண மனிதர்களின் யதார்த்தம்.

மனிதவாழ்வின் யதார்த்தம் இல்லாத இலக்கியப் படைப்பை என்னைப் பொறுத்தவரையில் மனமொன்றி கிரகிக்க முடியாது போகிறது. இந்த யதார்த்தம் புறவாழ்வுகளின் செயல்பாடுகளில் மட்டும் இருக்க வேண்டியதில்லை. மனவியல்ரீதியான யதார்த்தமாகவும் அதாவது டொலரோஸ்வ்ஸ்கியின் டபிள் என்ற நாவலைப்போலவே இருக்கமுடியும்.

உளவியல் ரீதியில் விளிம்புகளில் நிற்கும் பாத்திரப்படைப்புகள் மிகவும் பசுமரத்தாணியாக மனதில் பதிவதுடன் இரசிக்கக்கூடியதாக இருக்கிறது.

ஜெயமோகன் ஒருமுறை பேசும் போது தெளிவத்தை யோசப் தனது சமூகத்தை முன் னிறுத்தி பாடும் குலப்பாடகன் என்றார். அந்த வார்த்தை யில் மிகவும் உண்மையுள்ளது. இலங்கை மலையக சமூகம் அக்காலத்தில் தொண்டமான் போன்ற பெரியவர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. தொண்டமானை வெறுத்த சிங்களவர்கள்கூட அவரை எதிர்க்க முடியாததை நான் நேரில் பார்த்தேன்.

அவரது அமைச்சின் கீழ் நாலு வருடங்கள் மிருக வைத்தியராக இருந்ததால் சிலதடவை சந்தித்துமிருக்கிறேன். நெருங்கிப் பழக சந்தர்ப்பம் இல்லாத போதும் பலர் சொல்லி கேள்விப்பட்டு நான் மதிப்பு வைத்திருந்த இலங்கைத் தமிழ் அரசியல்வாதி தொண்டமான்.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா போன்ற மிக சாமர்த்தியமான அரசியல்வாதியிடம்கூட தனியாக நின்று போராடி மலையக மக்களைப் பாதுகாத்தவர். தற்பொழுது அப்படிபட்ட அரசியல்வாதிகள் இல்லாததால் இலக்கியவாதிகள், சமூகசேவையாளர் மற்றும் கல்விமான் போன்றவர்களின் வழிநடத்தலில் மலையக சமூகம் தங்கியிருக்கிறது.

முதலையின் பல்லிடுக்குகளில் இருந்து உணவு தேடும் பறவையின் நிலையில் மலையகத்தமிழர்கள் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் போன்றவர்கள் மலையக சமூகத்திற்கு முக்கியமானவர்கள். தெளிவத்தை ஜோசப்பை மதித்து கௌரவிப்பதன் மூலம் ஆக்க பூர்வமாக இயங்குவதற்கு பலரை மலையக சமூகத்தில் தயார் செய்யமுடியும்.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் அழைப்பு மூலம் தெளி வத்தை ஜோசப் மெல்பன் வந்தபோது அவரை முதல் முதலாக நண்பர் முருகபூபதியின் இல்லத்தில் சந்தித்த போது நான் அவரை ஒரு முதிர்ந்த எழுத்தாளராகக் காணவில்லை. பாடசாலை மாலையில் முடிந்தபின் விளையாட்டு மைதானத்தில் சந்தித்த பத்து வயது சிறுவனாகத்தான் பார்த்தேன். அழகான சிரிப்புக்குரிய அந்த மெல்லிய மனிதர் என்னை வரவேற்றவிதம் எனக்கு இன்னமும் நெஞ்சில் தங்கியிருக்கிறது.

இதுவரையில் எந்தவிருதுகளைப் பற்றியும் எழுதாத நான் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு விஷ்ணுபுரம் விருது கிடைத்திருக்கிறது என அறிந்ததும் இதுபற்றி எழுதுவதற்கு காரணம் இருக்கிறது. அவருக்கு விருது கொடுப்பதற்கு உந்து சக்தியாகத் திகழ்ந்த ஜெய மோகனும் விருதைப்பெறும் தெளிவத்தை ஜோசப்பும் எழுத்தாளர்கள் என்பதற்கும் அப்பால் நான் நேசமுடன் மதிக்கும் இருவர். இதனால் எனக்கு இரட்டைச் சந்தோசத்தை இந்த விருது தருகிறது.

# 13ம் திருத்தத்திற்கு பதிலாக புதிய ஒப்பந்தம்: மிலிந்த மொரகொடவின் கருத்து என்ன?

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

35 வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் மாகாணசபைகள் முறையை அந்த நாள் தொடக்கம் இந்த நாள்வரை பதவியில் இருந்த எந்த அரசாங்கமும் உருப்படியாக நடைமுறைப் படுத்தவில்லை. 13 வது திருத்தத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படாமல் இருப்பதை அரசாங்கங்கள் உறுதிசெய்துகொண்டன என்பதே உண்மை. இதை வெளிப்படையாக ஒத்துக்கொண்ட ஒரே ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே. இதை அவர் இலங்கையில் மாத்திரமல்ல,பதவியில் இருந்து இறங்கிய பிறகு புதுடில்லிக்கு சென்ற ஒரு சந்தர்ப்பத்திலும் கூட தலைவர்கள் மத்தியில் கூறினார்.

மாகாணசபைகள் இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்டவை என்ற அபிப்பிராயமே சிங்கள அரசியல் சமுதாயத்தின் பெரும்பகுதியிடம் பரவலாக இருக்கிறது. அதனால், மாகாணசபைகளை இல்லாமல் செய்வதற்கு அல்லது அதன் அதிகாரங்களை மேலும் குறைப்பதற்கு முன்னெடுக்கப்படக் கூடிய எந்தவொரு முயற்சிக்கும் தென்னிலங்கையில் பரவலாக வரவேற்பு கிடைக்கவும் கூடும்.

ஆனால், அது குறித்து மீள் பேச்சுவார்த்தையை நடத்துவதானால், இந்தியாவுடன் தான் செய்யவேண்டும். இன்றைய புவிசார் அரசியல் நிவைரத்துக்கு மத்தியில் இந்தியாவுக்கு அத்தகைய ஒரு தேவை இருக்கிறதா? இலங்கை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டாலும் கூட இது காலவரையில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பரவலாக்குவது தொடர்பில் அளித்த உறுதிமொழிகளை கொழும்பு காப்பாற்றாத நிலையில் மீள் பேச்சுவார்த்தைக்கு புதுடில்லி வருவது சாத்தியமா?

புதிய உடன்படிக்கை பற்றி மொரகொட பேசுகிறார் என்றால், இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கை முழுவதையும் மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தவேண்டும் என்று அவர் கருதுகிறாரா என்ற கேள்வியும் எழுகிறது. உடன்படிக்கையில் இலங்கை மாகாணங்களுக்கு அதிகாரப்பரவலாக்கத்தை செய்வதற்கான ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளை மாத்திரம் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த புதுடில்லி முன்வருமா? அவ்வாறு செய்ய முடியுமா?

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது வெறுமனே புதுடில்லியின் இடையறாத வலியுறுத்தலாக இருந்த நிலையில் இருந்து தற்போது ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மூலமாக சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தலாகவும் மாறியிருக்கிறது. அண்மைய மூன்று ஜெனீவா தீர்மானங்களில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில் மீள் பேச்சுவார்த்தை, புதிய உடன்படிக்கை பற்றிய உயர்ஸ்தானிகர் மொரகொடவின் கருத்து அடிப்படையில் இலங்கை ஆட்சியதிகார பீடத்தின் ஒரு பிரிவினரின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கிறதா? இந்தியாவும் ஜெனீவாவும் வலியுறுத்திக் கொண்டிருந்தாலும் கூட இலங்கையில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான சூழ்நிலை தோன்றுவது சாத்தியமில்லை என்பதைத் தான் மொரகொடவின் வார்த்தைகள் ஊடாக கொழும்பு வெளிப்படுத்தியிருக்கிறதா?

இவ்வாறாக விடைகளை வேண்டி நிற்கும் பெருவாரியான கேள்விகள் எழுகின்றன.

**உயர்ஸ்தானிகர் மொரகொடவின் இந்த மீள் பேச்சுவார்த்தை கருத்து குறித்து இலங்கையில் அரசியல் வட்டாரங்களின் கவனம் திரும்பவில்லை. ஏன் என்றும் புரியவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மாத்திரம் ருவிட்டர் சமூக ஊடகத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.**

மொரகொடவின் கருத்து குறித்து கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் பேராசிரியர் ஒருவருடன் பேசியபோது தற்போதைய சூழ்நிலையில், மீள்பேச்சுவார்த்தையொன்று இடம்பெறும் பட்சத்தில், கொழும்பின் நம்பிக்கையை வென்றெடுத்து அதை தன்பக்கம் கூடுதலாக இழுப்பதற்காக புதுடில்லி தமிழர்களுக்கு பாதகமான முறையில் மாகாணசபைகளின் அதிகாரங்களை மேலும் குறைக்கும் வகையில் இணங்கிக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று அவர் சொன்னார்.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை அதிகரிக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கோ அல்லது இந்திய அரசாங்கத்துக்கோ நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய வலுவான அரசியல் சமுதாயம் தமிழ் மக்கள் மத்தியில் இன்று இல்லை என்பதை அவர் ஒரு காரணமாகவும் சொன்னார்.

35 வருடங்களுக்கு முன்னர் உள்நாட்டுப் போர் தீவிரமடையத் தொடங்கிய காலப்பகுதியில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து பல ஏற்பாடுகளுக்கு இணங்க வைத்ததைப் போன்று தற்போது நிலைவரங்கள் பெருமள வுக்கு மாறிவிட்ட சூழ்நிலையில் செய் வது நடைமுறைச் சாத்தியமில்லை என்று புதுடில்லி தமிழர்களுக்கு கைவிரித்துவிடவும் கூடும்.

அதற்கு உதாரணங்களையும் கூற முடியும். ஆனால் இங்கு இடவசதியின் மட்டுப்பாடு கருதி அவை தவிர்க்கப் படுகின்றன.

உயர்ஸ்தானிகர் மொரகொடவின் இந்த மீள் பேச்சுவார்த்தை கருத்து குறித்து இலங்கையில் அரசியல் வட்டாரங்களின் கவனம் திரும்பவில்லை. ஏன் என்றும் புரியவில்லை.

இந்த கட்டுரையாளர் அறிந்த வரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பிருமான எம்.ஏ. சுமந்திரன் மாத்திரம் ருவிட்டர் சமூக ஊடகத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.

“13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதில் இருந்து கட்டியெழுப்பி மேலும் அர்த்தபுஷ்டியான அதிகாரப்பரவலைச் சாதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக இந்தியாவுக்கு இலங்கை பல தடவைகள் உறுதியதித்திருக்கிறது. அந்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்தவா புதிய உடன்படிக்கை?” என்ற கேள்வியாக அவரது பதிவு அமைந்தது.

அமைதி, சமாதானம், இனங்களிடையே நல்லிணக்கம் ஆகியவற்றுக்காக பாடுபடுகின்ற கொழும்பை தளமாகக் கொண்ட முக்கியமான தன்னார்வ நிறுவனம் ஒன்றின் நிறைவேற்று பணிப்பாளரும் அரசியல் அவதானியுமான ஒரு முக்கியஸ்தரிடம் மொரகொடவின் புதிய உடன்படிக்கை கருத்து குறித்து கேட்டபோது, “அத்தகைய யோசனைகளுக்கு பிரதிபலிப்பை வெளிப்படுத்தி ஒரு மதிப்பை நாம் கொடுத்துவிடக் கூடாது” என்று மாத்திரம் பதிலளித்தார். அவர் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜே.ஆரை ஜனாதிபதியாக்கியது 22ஆவது திருத்தம்! ரணிலைப் பலமாக்குகிறது 22ஆவது திருத்தம்!

**—— பனங்காட்டான்**



ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1978ல் நடைமுறைக்குக் கொண்டுவந்த அரசியலமைப்புச் சட்டம் இந்த மாதம் 21ம் திகதி 22வது திருத்தத்தை அமோக வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது.

தமக்குக் கிடைத்த அதீத பெரும்பான்மையை பயன்படுத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்கி, பின்னர் அதில் ஒரு திருத்தத்தை ஏற்படுத்தி தம்மைத் தாமே முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக்கி சாதனை புரிந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அப்போது அவருக்கு வயது 71.

1989 இறுதியில் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர், தம்மால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் 16 திருத்தங்களை அடுத்தடுத்து ஏற்படுத்திய சாதனையாளரும் இவரே. இவற்றுள் இரண்டு திருத்தங்கள் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வுடன் சம்பந்தப்பட்டவை.

1983 இனஅழிப்பை அடுத்து அவரால் நிறைவேற்றப்பட்ட ஆறாவது திருத்தம் தனிநாட்டுக் கோரிக்கையை உச்சரிப்பதைக்கூட தடுத்ததுடன், அரசாங்க ஊழியர்களிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள்வரை அனைவரும் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்கவில்லையென்று உறுதி எடுப்பதை சட்டமாக்கியது.

13வது திருத்தம் 1987ல் இடம்பெற்ற இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அதிகாரப் பரவலுக்காக கொண்டுவரப்பட்டது. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையின் அலங்கோல நிலை பற்றி இங்கு விபரிக்கத் தேவையில்லை.

14வது திருத்தம் ஜனாதிபதிக்கு சட்ட விதிவிலக்கை ஏற்படுத்தியதோடு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 ஆக அதிகரிக்கச் செய்தது. 15ம் 16ம் திருத்தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் தொகையை மாற்றியதுடன் தேர்தல் மாவட்ட வரையையும் நிர்ணயம் செய்தது. இந்தத் திருத்தங்கள் 1988 செப்டம்பரிலும் டிசம்பரிலும் இடம்பெற்றன. ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னாக இவைகளை ஜே.ஆர். செய்து முடித்தார். இந்தப் பின்னணியில், இந்த மாதம் 21ம் திகதி நிறைவேற்றப்பட்ட 22வது அரசியல் திருத்தம் முன்னையதின் தொடர்ச்சியாக வரலாற்றில் பதிவு பெறுகிறது.

22வது திருத்தத்தை இப்போது நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தை ராஜபக்சக்களே உருவாக்கினர் என்பதை அவர்களின் பொதுஜன பெரமுனவினரே ஒப்புக் கொண்டுள்ளனர். மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவிருந்த வேளையில் - 2010 செப்டம்பர் 18ம் திகதி நிறைவேற்றப்பட்ட 18வது திருத்தமும், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகவிருந்தபோது - 2020 அக்டோபர் 22ம் திகதி நிறைவேற்றப்பட்ட 20வது திருத்தமுமே 22வது திருத்தத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் ஏற்படுத்தியது.


ஒருவர் ஜனாதிபதிப் பதவியை இரண்டு தடவைகள் மட்டுமே வகிக்கலாமென்ற அரசியலமைப்பை மாற்றி எத்தனை தடவையும் வகிக்கலாமென்று 18வது திருத்தம் கொண்டுவரப்பட்டது. தமக்காக இத்திருத்தத்தை கொண்டு வந்த மகிந்த மூன்றாம் தடவை போட்டியிட்டு மண் கவ்வியது தனி வரலாறு.

ரணில் தரப்பினரின் ஆதரவோடு 2015ல் ஜனாதிபதி பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன 19வது திருத்தத்தை நிறைவேற்றி 18ம் திருத்தத்தை செல்லாக்காசாக்கினார். ஆனால், 2019 இறுதியில் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ச 19வது திருத்தத்தை நிராகரிக்கும் 20வது திருத்தத்தை அமுலாக்கி, ஜனாதிபதியாகிய தமக்கு சகல அதிகாரங்களையும் வழங்கும் வலுவை ஏற்படுத்தினார்.

இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள 22வது திருத்தம் கோட்டாபயவின் 20வது திருத்தத்தை தூக்கி வீசி விட்டு முன்னைய 19ம் திருத்தத்தின் அடிப்படையை மூலமாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் பலவற்றை 22வது திருத்தம் நாடாளுமன்றத்துக்கு மாற்றியுள்ளது.


அதுமட்டுமன்றி, மற்றிரு முக்கிய அம்சங்களையும் இது கொண்டுள்ளது. இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக முடியாது. நாடாளுமன்றத்தை அதன் முதல் அமர்விலிருந்து இரண்டரை வருடங்களின் பின்னர் எப்போது வேண்டுமானாலும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்குகிறது. இதன் பிரகாரம், பசில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்கு வருவது தடுக்கப்படுகிறது. (அவர் விரும்பினால் அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்துச் செய்துவிட்டு தேர்தலுக்கு வரமுடியும். முன்னர் கோட்டாபய செய்தது போன்று பசில் செய்வாரா என்று நிச்சயமாகக் கூற முடியாது).

> **1977ல் நேரடியாக தேர்தல் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவாகாத ஜே.ஆர். ஜெயவர்த்தன தமது அரசியலமைப்பில் 2வது திருத்தத்தை ஏற்படுத்தி தம்மைத் தாமே அக்கதிரையில் ஏற்றினார். அதே தடத்தில் ரணிலும் தேர்தல் மூலமாகவன்றி, நாடாளுமன்ற பெரும்பான்மையால் ஜனாதிபதியாகி 22வது திருத்தத்தின் வழியாக அக்கதிரையை இப்போது இறுகப் பற்றியுள்ளார்.**



19வது திருத்தத்தின்படி நாடாளுமன்றத்தை நாலரை ஆண்டுகளின் பின்னரே கலைக்க முடியும். ஆனால், 20வது திருத்தம் அதில் இரண்டு ஆண்டுகளைக் குறைத்து இரண்டரை ஆண்டாக்கி விட்டிருந்தது. இதுவே இப்போது 22யிலும் தொடர்கின்றது. இதன் வழியாக தற்போதைய நாடாளுமன்றத்தை 2023 மார்ச் மாதத்தின் பின்னர் எப்போது வேண்டுமானாலும் ரணிலினால் கலைக்க முடியும்.

22வது திருத்தம் அமைச்சர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையை முப்பது ஆகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை நாற்பதாகவும் மட்டுப்படுத்துகிறது. ஆனால், ஒன்றுக்கு மேற் பட்ட கட்சிகள் இணைந்த தேசிய அரசு அமையுமாயின் இந்த எண் ணிக்கையில் மாற்றம் கொண்டு வரலாம்.



பொதுத்தேர்தலில் தோல்வியடைந்து, தேசியப்பட்டியலூடாக ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் என்ற வகையில் தனியனாக நாடாளுமன்றத்தில் எம்.பியாகி, ராஜபக்சக்களுக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் பரிசாக முதலில் பிரதமராகி பின்னர் நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாகத் தெரிவான ரணில், தமது தந்திரோபாய நகர்வினால் அரசியலமைப்பில் எதிர்பாராத மாற்றத்தை ஏற்படுத்திவிட்டார்.

கட்சிகளைப் பிரித்து பிளவுபடுத்தி அதில் ஆதாயம் பெற்றுள்ள ரணில் தம்மை அரியாசனம் ஏற்றிய பொதுஜன பெரமுனவையும் துண்டுகளாக்கி விட்டார். இதற்கு அவரது பெரிய தந்தையார் உருவாக்கிய அரசி யலமைப்பே கைகொடுத்து உதவுகிறது. நாற்பத்துநாலு வருடங்களைப் பூர்த்தி செய்த ஜே.ஆரின் அரசியலமைப்பு 22 திருத்தங்களைக் கண்டுவிட்டது. இரண்டு வருடங்களுக்கு ஒன்று என்ற வகையில் இதனைப் பார்க்கலாம்.

22வது திருத்த வாக்களின் போது 179 எம்.பிக்கள் இதனை ஆதரித்தனர். முன்னாள் கடற்படை அதிகாரியும் சிங்கள இனவெறியரு மான சரத் வீரசேகர மட்டும் இதனை எதிர்த்து வாக்களித்தார். மகிந்த ராஜபக்ச உட்பட பெரமுனவின் 44 எம்.பிக்கள் வாக்களிப்பின்போது சபையில் சமுகமளிக்கவில்லை. ஆனால், மகிந்தவின் மகனான நாமல் ராஜபக்சவும், மகிந்தவின் தமையனாரான சாமல் ராஜபக்சவும், அவரது புதல்வரான சசீந்திர ராஜபக்சவும் திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சம்பந்தன், சாணக்கியன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் சபையில் இருக்கவில்லை. 22ஐ எதிர்த்து உரையாற்றிய சுமந்திரனை தனியே விட்டு செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் உட்பட கூட்டமைப்பின் ஏழு எம்.பிக்களும் திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தனர். (கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் முதன்முறையாக இவ்வாறான தனிமைப்படுத்தலுக்கு உள்ளானதும் ஒரு வரலாறு).

ஒட்டுமொத்தத்தில் பார்க்கப் போனால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் 22வது திருத்தத்தை ஆதரித்துள்ளன. ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் 44 பேர் தவிர மிகுதிப்பேர் திருத்தத்தை ஆதரித்துள்ளனர். கூட்டமைப்பிலும் நான்குபேர் தவிர மிகுதி ஆறுபேரும் ஆதரித்துள்ளனர். விக்னேஸ்வரனும் ஆதரவாக வாக்களித்தார். ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இருவரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இதனூடாக எவ்வகையில் கட்சிகளை பிளவுபடுத்தும் கைங்கரியத்தை ரணில் செய்துள்ளாரென்பதை காணமுடிகிறது.

1978ல் தம்மால் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பில் இரண்டாவது திருத்தத்தைக் கொண்டு வந்து அதன் வழியாக (தேர்தலின்றி) தம்மை ஜனாதிபதியாக்கியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அவரது அரசியல் வாரிசான ரணிலும் நேரடியாக மக்கள் வாக்களிப்பின்றி ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்து, அதனைப் பலப்படுத்த பக்குவமாக 22வது திருத்தத்தை நிறைவேற்றியுள்ளார்.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் ஒரு கிழட்டு நரி முன்னெடுத்த அரசியல் பாதையில், அச்சொட்டாகப் பாதம் பதித்து நடைபோடுகிறது ஒரு குள்ளநரி என்று சொன்னால் அது தவறாகாது.

# எங்களைப் போல ஆகிவிடாதீர்கள்...!



## சமூகத்துக்காக ஒலிக்கும் போதைக்கு அடிமையானோரின் குரல்

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

யாழ்ப்பாணத்தை – வடக்கை – முழுநாட்டை யும் இன்று ஆட்டிப்படைப்பது ஒன்றே... அது, உயிர்கொல்லியான போதைப்பொருள்! ஒரு காலத்தில் கள்ளு, மதுபானம், சிகரெட் என்ற சிறிய போதை ஏற்படுத்தும் வகையறாக்ககளே பெரும் குற்றங்களாக கருதப்பட்ட சமூகம் காணப்பட் டது. ஆனால், இவை ஒரு பொருட்டே அல்ல என்று சொல்லுமளவுக்கு நாட்டில் போதைப்பொருள்கள் பல்கிப் பெருத்துவிட்டன.

தெரிந்தும் – தெரியாமலும் எண்ணிலடங்காதவர்கள் போதை என்ற உயிர்கொல்லிக்கு அடிமையாகி தங்கள் வாழ்க்கையை மட்டுமின்றி தங்களை சுற்றியிருப்பவர்களின் வாழ்வையும் நாசமாக்கி அழித்துவிடுகிறார்கள். குற்றங்கள் மலிந்த பூமியாக மாறிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தை – வடக்கை – இலங்கையை மீட்பதற்கு பலரும் முயற்சி களை எடுக்கிறார்கள்.

போதைப் பொருள் தொட்டவர்களை விட்டதில்லை... என்ற கூற்றே உள்ளது. ஆனால், அதிலிருந்து மீளமுடியும் என்ற நம்பிக்கையுடன் சிகிச்சை பெறுபவர்கள் போதையால் அழிந்த தங்கள் வாழ்வை – ஏற்பட்ட இழப்புகளை – சந்தித்த அவமானங்கள், துன்பங்கள் மற்றவர்கள் சந்தித்துவிடக் கூடாது என்ற நோக்கில் இங்கு மனம்திறக்கிறார்கள்...!

## வெட்கம் பாராமல் புனர்வாழ்வை நாடுங்கள்

### போதைக்கு அடிமையானவர்
(தற்போது சிகிச்சையில்)
வயது 36 – அரச உத்தியோகத்தர்

நான் அரச திணைக்களம் ஒன்றில் உயர் பதவியிலிருக்கிறேன். 8 வருடங்களுக்கு முன்பு - உயர் பரீட்சை ஒன்றை எழுதுவதற்காக கொழும்பில் தங்கியிருந்த போது - எனது நண்பர்களுடன் சேர்ந்து ஹெரோயின் போதைப்பொருளை முதன்முதலாகப் பாவித்தேன்.

கொழும்பில் இருந்தபோது சில நாட்கள்தானே... என்று ஹெரோயினை பயன்படுத்தினேன். பரீட்சை முடிந்த பின்னர் வடக்குக்கு - சொந்த ஊருக்கு திரும்பினன். இங்கும் அது கிடைக்கும் என்று நினைக்கவில்லை. இதனால், நான் அதனைத் தொடர்ந்து பாவிக்க ஆரம்பித்தேன். 7 வருடங்களாக அதை என்னால் விடமுடியவில்லை.

நான் வங்கியிலிருந்த பணத்துடன் நகைகளை விற்றும் ஹெரோயினை பாவித்தேன். இதனால் நான் சொத்துக்களை மட்டுமல்ல இழக்கக்கூடாத எனது சொந்தங்களை - நண்பர்களை இழந்தேன்.


ஹெரோயின் இல்லாமல் என்னால் தினமும் இயங்க முடியவில்லை. ஒரு வாளி தண்ணீரை அள்ளி உடம்பில் ஊற்றக்கூட முடியாதளவு இயலாமைக்கு அது என்னை தள்ளியது.

நான் ஹெரோயினைப் பாவிப்பதற்கு முதல் வீதியில் 50 பேரைப் பார்க்கிறேன். என்றால் 30 பேர் என்னைப் பார்த்துத் தலையாட்டி சிரிப்பார்கள். ஆனால், அதைப் பாவிக்க ஆரம்பித்து அதற்கு அடிமையான பின்பு நான் போகும் வழியில் நான் 10 பேரைப் பார்த்தால் அதில் 9 பேர் தலையை மறுபக்கம் திருப்பிக்கொண்டு செல்வார்கள். இல்லாவிட்டால் என்னைக் கண்டு ஒளித்து ஓடுவார்கள். ஏனெனில், அவர்களிடம் நான் பணம் கேட்டிருப்பேன். இல்லையென்றால் ஏதோ ஒரு வகையில் அவர்களைத் தொந்தரவு செய்திருப்பேன்.

போதை அடிமைத்தனத்தை மீள்வதை தனியே மருந்தால் மட்டும் குணப்படுத்த முடியாது. எல்லாவற்றுக்கும் மனமே காரணம். ஆனால், இந்தக் ஹெரோயினை விட்டு நாங்கள் வெளியே வருவோம். எங்களாலும் இது இயலும் என்று எங்களுக்கு, எங்கள் மனதுக்குத் தெரிய வேண்டும். உளரீதியாக மாற்றமொன்று வரும்வரை யாரும் இதிலிருந்து குணப்படவே முடியாது. முதலில் எமது மனதில் நாம் இதிலிருந்து வெளியேறலாம் என்ற நம்பிக்கை வர வேண்டும் அப்போதுதான் இதிலிருந்து நாங்கள் வெளியேறலாம்.

என்னைப்போல நிலைமாறிப் போனவர்கள், வெட்கத்தைப் பார்க்காமல் புனர்வாழ்வு மையங்களை நாட வேண்டும்.

## போதைக்கு அடிமையானோரை நாம் ஒதுக்கிவிட முடியாது



### அருட்கலாநிதி ஜோன் போல்
(போதைக்கு அடிமையானோரை ஆற்றுப்படுத்துபவர்)

போதைப் பொருட்களால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், மாணவர்களை திருத்தும் நிலையமாக “மாற்ம்“ அறக்கட்டளை நிலையத்தில் செயல்பட்டு வருகிறோம். போதையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், இளைஞர்கள் வருகிறார்கள். உத்தியோகத்தர்களும் கூட வருகிறார்கள்.

தங்களை மீட்டெடுக்க முடியாதளவில் இங்கே வருகின்றார்கள். அவர்களுடன்கூட இருந்து அவர்களுக்கான சிகிச்சை அளிப்பது வரை செய்கின்றோம்.

நோயாளர்களாக வருகின்ற - பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளித்து வருகின்றோம். அவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் மற்றும் உளவியல் தாக்கங்கள் ஏற்படுபவர்களுக்கு உளரீதியான ஆற்றுகை மற்றும் பல விடயங்களை நாங்கள் அவர்களுக்கு செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதற்காக ஏனைய தரப்பினருடன் இணைந்து அவர்களுக்கான விளையாட்டுகள் - விழிப்புணர்வு செயல்பாடுகளை மேற் கொண்டு அவர்களை இந்தப் போதைப் பொருள் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்குரிய ஏற்பாடுகளை நாங்கள் செயல்படுத்துகிறோம். போதைப்பொருளால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் அவர் எங்களிடத்தில் வரும்போது சாப்பிட மாட்டார், கோபத்துடன் வருவார். வாழ்க்கையே வெறுத்துப்போய் வருவார் அதாவது போதைப் பொருளானது அவர்கள் வாழ்க்கையை வாழ முடியாத அளவுக்கு அதாவது போதைப் பொருள் இல்லாமல் ஓர் அடிகூட நகர முடியாத நிலையில்தான் வருவார்கள்.

அத்துடன், நாம் கூறக்கூடிய விடயங்களை ஏற்கக் கூடிய மனநிலையில் அவர்கள் வரமாட்டார்கள். போதைப் பொருளானது அவர்களை மிகவும் மாற்றிவிடும். அது அவர்களை வித்தியாசமான மனிதர்களாக வழிநடத்துகின்றது.

நாங்கள் போதைப் பொருளால் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சையளிக்கும்போது, சிலர் எம்மை தாக்கியும் உள்ளார்கள். ஆனால், அதற்கு ஒருபோதும் எதிராக செயல்படுவதில்லை. ஏனென்றால், அது போதைப் பொருளுக்கு அடிமையான மனிதரால் செய்யப்படவில்லை. அவருக்குள் இருக்கும் அந்தப் போதை அடிமைத்தனம்தான் அவரை செயல்படுத்துகின்றது.இவர்களை நாம் ஒதுக்கி விட முடியாது. அவ்வாறு ஒதுக்கும்பட்சத்தில் எமது சமூகம் மிகவும் கீழ் மட்டத்துக்கு செல்ல நேரிடும்.

## நீங்களும் என்போல் ஆகிவிடாதீர்கள்...!

### போதைக்கு அடிமையானவர்
(தற்போது சிகிச்சையில்)
வயது – 16 – மாணவன்

“நான் ஓ. எல். படித்துக் கொண்டிருக்கும் மாணவன். பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று வருகிறேன். நான் எனது நண்பர்களுடன் விளையாட மாலையில் மைதானத்துக்கு செல்வதற்கு வழக்கம். அங்கு என்னுடன் விளையாட வரும் நண்பர்கள் - அவர்கள் என்னை விட வயது கூடியவர்கள் - பீடி பத்துவார்கள். அப்போது.... அது ஹெரோயின் என்றும், என்னை பத்திப் பார்க்கும்படி சொன்னார்கள். முதலில் வேண்டாம் என்றுதான் சொன்னேன்... பிறகு அதைப் பத்தினேன்.

முதல்நாள் அதனைப் பத்தியபோது எனக்குள் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அடுத்தநாளும் அவ்வாறே நடந்தது. மூன்றாம் நாளும் எனக்கு ஹெரோயின் தந்தார்கள். நான்காம் நாள் எனக்கு அது இல்லாமல் இருக்க முடியவில்லை. நானே அதனைத் தருமாறு கேட்டு அவர்களிடம் வாங்கிப் பத்தப் பழகிக் கொண்டேன். தொடர்ந்து அதனை விட என்னால் முடியவில்லை.

ஹெரோயினை பத்தாவிட்டால் என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை. உடல் நடுங்கியது. ஒரு வித வலி உடலில் வந்து ஒட்டிக்கொண்டது. நாரி நோவும் ஏற்பட்டது. வயிறும் வலிக்கத் தொடங்கியது. உடல் சோர்ந்து போனது. அதைப் பத்தினால் மாத்திரமே என்னால் இயங்க முடிந்தது. ஹெரோயினை நான் பத்திப் பழக முன்னர் அதே நண்பர்கள் எனக்கு கஞ்சாவை பயன்படுத்தவும் கற்றுத் தந்தார்கள். வீட்டுக்குத் தெரியாமல், அதனை நான் பத்த ஆரம்பித்தேன். பின்னர் ஹெரோயின் தந்தார்கள். கஞ்சாவைவிட ஹெரோயினில் போதைத் தன்மை அதிகமாக இருந்ததால் அதற்கு நான் அடிமையானேன். இதற்காக ஒருநாளில் ஆகக்குறைந்தது 1500 ரூபாய் செலவு ஏற்படும்.

பணத்துக்காக எனது வீட்டில் புத்தகம் வாங்கக் காசு தாருங்கள் என்று கேட்பேன். கடைக்குப் போய் வரும்போது மீதிப் பணத்தை எடுத்துக்கொள்வேன். எனது உறவினர் வீடுகளுக்குப் போய் ஒவ்வொரு வீடுகளிலும் 200, 300 ரூபாய் என்று கேட்டு வாங்குவேன். இதன்பிறகு எனது நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தை எனது பெற்றோர்களும் உறவினர்களும் அறிந்து கொண்டனர். இதனால், என்னை வீட்டை விட்டு வெளியே போகவிடாது மறித்து வைத்தனர்.

அப்போது வீட்டிலுள்ள பணத்தை அம்மா, அப்பாவுக்குத் தெரியாமல் திருடி எனது மைதான நண்பர்களுக்கு போனில் தகவல் கொடுத்து, வீட்டின் பின்பக்க யன்னலூடாக அதனைப் பெற்று வீட்டுக்குள்ளேயே பத்தினேன். யார் என்ன சொன்னாலும் என்னால் அதிலிருந்து மீள முடியவில்லை.

இப்போது நான் போதையிலிருந்து மீள்வதற்காக தடுப்பு மையமொன்றில் இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால், போதைப்பொருள் பாவித்துக் கொண்டிருக்கும்போது நான் செய்து கொண்டிருப்பது தவறு என்று எனக்குப் புரியவில்லை. அதனைப் பாவிக்க ஆரம்பித்த பின்னர் நான் பாடசாலையிலிருந்தும் (நிர்வாகத்தால்) நிறுத்தப்பட்டேன். எனது வாழ்க்கையே அழியும் நிலை ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. என்னால் என் பெற்றோர், என் உறவினர்கள் அனைவரும் மிகுந்த கவலையில் இருக்கிறார்கள். எனது சகோதரன் அன்பானவன். இன்னும் சிறிது காலம் அப்படியே இருந்திருந்தால்... என்னைப் பார்த்து அவன் தனது பழக்கத்தை மாற்றிக் கொள்ளக்கூட ஒருவேளை நான் காரணமாக இருந்திருக்கலாம். இப்போது நான் பாடசாலைக்குச் செல்லாமலேயே போதைத் தடுப்பு மையத்திலிருந்து படித்துக் கொண்டிருக்கிறேன். இருந்தாலும் நான் நிறைய விடயங்களை இழந்துவிட்டேன்.

நண்பர்களே, போதைப் பழக்கத்துக்கு அடிமையானால் எமது வாழ்க்கை மாத்திரமல்ல எம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையும் சிதைவடைந்து போக நாம் காரணமாக இருந்துவிடுவோம் என்பதை இப்போது உணர்ந்து கொண்டிருக்கிறேன். எம்மை அறியாமலேயே இந்தத் தீய பழக்கத்துக்கு நாம் ஆளாகிவிடும் நிலை இப்போது எம்மைச் சுற்றியுள்ளது. நாம் பாதுகாப்பாக இருப்பதால் மாத்திரமே எமது வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொண்டவர்களாவோம் - என்னைப் போல் நீங்களும் ஆகிவிடாதீர்கள்...

## பூஜா ஹெக்டே காயம்



தமிழில் விஜயுடன் பீஸ்ட் படத்தில் நடித்த பூஜா ஹெக்டே தற்போது தெலுங்கு, ஹிந்தியில் பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் சல்மான்கான் உடன் இணைந்து நடிக்கும் ஒரு ஹிந்தி படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொண்ட போது ஏற்பட்ட சிறிய விபத்தால் அவரது காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பூஜா ஹெக்டேவுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அவரை ஓய்வு எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். ஆனால் ஓரிரு நாட்களிலேயே அவர் மீண்டும் படப்பிடிப்புக்கு திரும்பி விட்டார். அடிப்பட்ட கால் உடன் அவர் படப்பிடிப்புக்காக மேக்கப் செய்து கொண்டு தயாராகும் படத்தையும் பதிவிட்டுள்ளார் பூஜா ஹெக்டே.

## வருகிறார் பார்வதி

விக்ரம் நடிக்கும் படத்தை இயக்குகிறார் இயக்குநர் பா. ரஞ்சித். இந்த படத்தின் கதை கே. ஜி. எவ். பாணியில் கோலார் தங்க வயல் பின்னணியில் நடைபெறும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

இந்த படத்தில் கதாநாயகியாக நடிகை நடிகை பார்வதி ஒப்பந்தமாகியுள்ளார். அது மட்டுமல்ல இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஏற்கனவே ஆந்திர மாநிலத்தில் உள்ள கடப்பாவில் நடக்கிறது.

முதலில் இந்தப் படத்தில் நாயகியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கஇருந்தார். ஆனால், படப்பிடிப்புக்கான திகதி பிரச்னைகளால் அவர் நடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## திரையுலகம் மாறிவிட்டது

16 ஆண்டுகளுக்கு பிறகு நடிக்க வந்திருக்கிறார் லைலா. சர்தார் படத்தில் முக்கியமான வேடத்தில் நடித்திருக்கிறார். தனது மீள் பிரவேசம் குறித்து அவர் கூறியதாவது, திருமணத்துக்கு பிறகு மனைவியாக, தாயாக எனக்கு நிறைய கடமைகள் இருந்தன. திரையுலகை விட்டு விலகியிருந்தேன்.

16 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது மீண்டும் நடிக்க வந்திருக்கிறேன். மீண்டும் நடிக்கலாம் என்று முடிவு செய்து அதற்கான நல்ல கதைக்கு காத்திருந்தபோதுதான் மித்ரன் வந்தார். அவர் சொன்ன கதை எனக்கு பிடித்திருந்தது. உடனே நடிக்க ஒப்புக் கொண்டேன். அதுவும் சூர்யாவுடன் நடித்து பிரபலமானேன். இப்போது அவரின் தம்பி மூலம் மீள் பிரவேசித்துள்ளேன். என்பதே சந்தோஷமாக இருக்கிறது. இப்போது திரையுலகம் நிறைய மாறி இருக்கிறது.

## ரூ. 50 கோடியை தொடும் சிவா

'ப்ரின்ஸ்' படத்தில் 30 கோடி இந் திய ரூபாய் சம்பளம் பெற்றிருக்கிறா ராம் சிவகார்த்திகேயன். 'மாவீரன்' படத்தை சிவாவின் நண்பர் அருண் தயாரிப்பதால், சம்பளம் குறித்த விசயத்தை இரகசியமாக வைத்திருக்கிறார்கள்.

'மாவீரன்' படத்துக்கு அடுத்து ஒப்பந்தமாகும் படங்களுக்கு, 50 கோடியை சிவகார்த்திகேயன் தொடக்கூடும் என்கிறார்கள். டிஜிற்றல் சந்தை உலகில் சிவகார்த்திகேயன் படங்களுக்கு மதிப்பு உயர்ந்திருப்பதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளாராம்.





## மகேஷ்டன் தீபிகா

"ஆர். ஆர். ஆர்." படத்தின் வெற்றிக்கு பிறகு ராஜமவுலி இயக்கும் படத்தில் மகேஷ் பாபு நடிக்கிறார். இந்த படம் புதையல் வேட்டை பற்றியது. இதன் கதையை ராஜமவுலியின் தந்தையும் பாகுபலி, ஆர். ஆர். ஆர். படத்தின் கதையை எழுதியவருமான விஜயேந்திர பிரசாத் எழுதி இருக்கிறார்.

இந்த படமும் 500 கோடிக்கும் கூடுதலான செலவில் தயாராகிறது. இந்த படத்தில் மகேஷ் பாபு ஜோடியாக தீபிகா படுகோனை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது. தீபிகா ஹொலிவூட் படங்களில் நடித்ததன் மூலம் உலகம் அறிந்த நடிகையாக இருப்பதால் அவரை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது. இது இறுதிகட்டத்தையும் அடைந்துள்ளது.




**திரைப்படம் - சர்தார்**
**இயக்கம் - பி. எஸ். மித்ரன்**
**இசை - ஜிவி பிரகாஷ்குமார்**
**நடிப்பு - கார்த்தி, ராஷி கண்ணா, ரஜிஷா விஜயன், லைலா**

"இரும்புத் திரை" மூலம் டிஜிற்றல் உலகத்தில் இப்படியெல்லாம் நடக்குமா என தனது முதல் படத்திலேயே வியக்க வைத்தவர் இயக்குநர் பி. எஸ். மித்ரன். அதற்குப் பிறகு அவர் இயக்கிய "ஹீரோ" படத்தில் நல்ல கருத்தை எடுத்துக் கொண்டாலும் கொஞ்சம் சறுக்கியிருந்தார். அந்த சறுக்கலை இந்த "சர்தார்" மூலம் சரி செய்திருக்கிறார்.

உளவாளி ஒருவரைப் பற்றிய கதை இது. இந்தப் படத்தில் தண்ணீர் பற்றிய கருத்துதான் மையம். எதிர்காலத்தில் இப்படியெல்லாம்கூட நடக்கலாம் என்ற கற்பனையை நம்பும்படியாகக் கொடுத்திருக்கிறார் இயக்குநர்.

கார்த்தி காவல்துறை ஆய்வாளராக இருக்கிறார். ஒரு போராட்டத்தில் கலந்து கொண்ட லைலா மர்மமான முறையில் கொல்லப்பட்டதை விசாரிக்க ஆரம்பிக்கிறார். அதன் பின்னணியில் பல மர்மமான விசயங்கள் இருப்பது தெரிய வருகிறது. நாடு முழுவதும் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்ய ஆரம்பிக்கும் பெருநிறுவனத்துக்கும், தேசத் துரோகி என முத்திரை குத்தப்பட்ட தனது அப்பா சர்தார் பற்றிய இரகசியங்களுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதை கண்டுபிடிக்கிறார். அதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இந்திய அரசாங்கத்தின் உளவுத் துறையான "றோ"வின் உளவாளி சர்தார், காவல் ஆய்வாளர் விஜய் பிரகாஷ் என இரு வேடங்களில் கார்த்தி. இரண்டு கதாபாத்திரங்களுக்கும் நன்றாக வித்தியாசம் காட்டி நடித்திருக்கிறார். பின்கதையில் கிராமத்தில் கூத்து கட்டும் சந்திரபோஸ், எப்படி உளவாளி சர்தார் ஆக மாறுகிறார் என்பது சுவாரசியமாக அமைக்கப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் கார்த்தியை விடவும், உளவாளி கார்த்திக்கான நாயகத்தனம் மிரட்டலாக அமைக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் சிறையிலிருந்து தப்பிக்கும் சண்டைக் காட்சி, றோ அலுவலகத்தில் நடக்கும் சண்டைக் காட்சி, உச்சக்கட்ட சண்டைக் காட்சி ஆகியவை அற்புதமாக படமாக்கப்பட்டுள்ளன. இவற்றில் கார்த்தியின் சண்டை, நடிப்பு அசத்தலாக அமைந்துள்ளது. கார்த்தியின் வெற்றிப் படங்களிலும் முக்கியமான கதாபாத்திரங்களிலும் இந்தப் படமும் நிச்சயம் இடம் பிடிக்கும்.

கதாநாயகிகளுக்கு அதிக வேலையில்லை. மகன் கார்த்திக்கு ஜோடியாக ராஷி கண்ணா. அப்பா கார்த்தியின் இளமைக் கால காதலியாக ரஜிஷா விஜயன். இருவருக்கும் குறைந்த காட்சிகள்தான். வந்து போகும் காட்சிகளாக இல்லாமல், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. லைலா கொஞ்ச நேரமே வந்தாலும் நல்ல விசயத்திற்காகப் போராடி தன் உயிரை இழக்கிறார்.

மத்திய அரசுக்காக பல திட்டங்களை செயல்படுத்திக் கொடுத்து, பின் பெருநிறுவன முதலாளியாக மாறி, சீனாவின் முகவர் ஆகவும் செயல்படும் வில்லனாக சங்கி பாண்டே. கார்த்தியின் வளர்ப்பு அப்பாவாக முனிஷ் காந்த். லைலாவின் மகனாக ரித்விக் ஆகியோரும் முக்கியமான கதாபாத்திரங்களில் முத்திரை பதித்திருக்கிறார்கள்.

மூன்றாம் உலகப் போர் தண்ணீரால்தான் வர வாய்ப்புள்ளது என ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். உலகத்தில் ஒரு பக்கம் தண்ணீர்ப் பஞ்சத்தால் தவிக்கிறார்கள், மற்றொரு பக்கம் அளவக்கதிகமான தண்ணீரால் பாதிப்புகளும் வருகிறது. இந்தக் காலத்தில் "போத்தல் தண்ணீர்" என அடைத்து வைக்கப்படும் தண்ணீரால் ஒரு பெரும் வியாபாரம் நடந்து வருகிறது. எதிர்காலத்தில் தண்ணீரை அனைவரும் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படலாம் எனச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் மித்ரன். படத்தில் சில விசயங்கள் கொஞ்சம் கூடுதலாக சொல்லப்பட்டிருப்பது போலத் தோன்றினாலும் அவை எதிர்காலத்தில் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. படம் பார்த்த பிறகு தண்ணீர் போத்தல் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்புண்டு.

ஜி. வி. பிரகாஷ்குமாரின் இசையில் பாடல்கள் ஏமாற்றமே. "ஏறுமயிலேறி.." பாடல் மட்டும் பரவாயில்லை. இம்மாதிரியான படங்களைப் பார்க்கும் போது நடிகர்கள் பேசும் வசனங்கள் புரிய வேண்டும். படத்தில் இடைவெளி இல்லாமல் பின்னணி இசையை வாசித்துத் தள்ளியிருக்கிறார் ஜி. வி. பிரகாஷ். சவுண்ட் மிக்சிங் செய்தவரும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வசனங்கள் தெளிவாகக் கேட்காத அளவுக்க கலந்துள்ளார். படத்தின் ஆரம்பத்தில் உளவாளிகள் பற்றி சில காட்சிகள் இடம்பெறு கின்றன. ஒன்றுமே புரியவில்லை. வசனங்கள் மூலம் புரிந்து கொள்ள வேண்டிய பல விசயங்கள் புரியாமல் போவது படத்துக்கு மறை தாக்கம். படத்தின் நீளத்தையும் கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

# அதிரடி காட்டிய சிறிய அணிகள்: வெளியேறிய மேற்கிந்திய தீவுகள்

உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றில் இலங்கையும் நெதர்லாந்தும் விளையாடிய போட்டி. நெதர்லாந்தின் வெற்றி வாய்ப்புகள் மங்கிப் போய்விட்டன.

போட்டியின்போது காயமடைந்த நெதர்லாந்து வீரர் வான் டேர் மெர்வ் துடுப்பெடுத்தாடி வந்தார். கொஞ்சம் கூட நடக்க முடியாமல் இருந்த மெர்வ் போட்டியின் முடிவை மாற்றப்போகாத ஓர் ஓட்டத்துக்காக வலியை பொறுத்துக் கொண்டு ஓடினார். அது ஒரு வீரரின் போராட்ட குணம் மட்டுமல்ல. இந்த சுற்றில் விளையாடிய ஒவ்வொரு இணை அணிகளின் போராட்ட குணமும் இப்படித்தான் இருந்தது.

பெரிய அணிகளுடன் ஒப்பிடும்போது இந்தத் தொடருக்கு முன்பாக இந்த சிறிய அணிகள் விளையாடியுள்ள போட்டிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவே. கடந்த உலகக் கிண்ணத்துக்கும் இந்த உலகக் கிண்ணத்துக்கும் இடையில் சில பெரிய அணிகள் விளையாடியுள்ள போட்டிகளின் எண்ணிக்கை:

இந்தியா - 34, பாகிஸ்தான் - 25, இங்கிலாந்து - 21, அவுஸ்திரேலியா - 17 இப்படி பெரிய நாடுகள் நிறைய இருபது - 20 போட்டிகள் விளையாடிய கையுடன் உலகக் கிண்ணத்தைத் தொடங்குகிறார்கள். ஆனால், இணை அணிகளின் நிலைமை இதிலிருந்து முற்றிலும் முரணானது. கடந்த உலகக் கிண்ணத்துக்கும் இந்த உலகக் கிண்ணத்துக்கும் இடையில் சிறிய அணிகள் விளையாடியுள்ள போட்டிகளின் எண்ணிக்கை - ஸ்கொட்லாந்து - 2, நமீபியா - 8, நெதர்லாந்து - 8, சிம்பாப்வே, அயர் லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகள் மட்டுமே ஏறக்குறைய 10 போட்டிகளில் விளையாடியுள்ளன. அவர்கள் விளையாடியதில் பெரும்பாலான தொடர்கள் அவர்களை போன்ற சிறிய அணிகளுக்குள் தான். ஒரு சில போட்டிகள் மட்டும் பெரிய அணிகளுக்கு எதிராக விளையாட வாய்ப்பு கிடைத்தன. இப்படியான சூழலில் தான் இணை அணிகள் உலகக்கிண்ணத் தொடருக்கு உள்ளே வந்தன. இது மட்டுமல்லாமல் அவைகளுக்கு கிடைக்கும் வசதிகள் தொடங்கி பல பிரச்னைகளையும் சந்திக்கின்றன.

ஒரே ஆடுகளத்தில் காயமடைந்த வீரர் ஒருவரும் காயமடையாத வீரரும் ஓட்டம் எடுக்க ஓடுவதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கும்? அது தான் பெரிய அணிகளுக்கும் இணை அணிகளுக்கும் இடையில் இருந்த வித்தியாசம். இந்த உலகக்கிண்ணத்தில்தான் முதன்முறையாக முதல் சுற்றில் விளையாடிய அனைத்து அணிகளும் குறைந்தது ஒரு வெற்றியை பெற்றுள்ளன. முதல் சுற்றின் முதல் நாளிலேயே ஆசியக் கோப்பை சம்பியனான இலங்கையை வென்றது நமீபியா. கடைசி நாளில் அயர்லாந்து மேற்கிந்தியத் தீவுகளை வென்று சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதி பெற்றது. இப்படி தொடக்கம் முதல் இறுதிவரை எவ்வளவோ சிறப்பான விஷயங்களை இந்த 6 நாட்கள் தந்துள்ளன.




## உலகக் கிண்ணம் முதல் சுற்று ஒரு பார்வை

குழு பி-யில் சிம்பாப்வே மற்றும் அயர்லாந்து அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. சிம்பாவே அணி இருபது -20 உலகக் கிண்ண வரலாற்றிலேயே முதன்முறையாக சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

சமீபத்தில், சிம்பாப்வே அணியைப் பற்றிப் பேசினால் அதில் சிக்கந்தர் ரஸாவுக்கே பெரும் பங்கு இருக்கும். இந்தச் சுற்றிலும் சிறப்பாக செயல்பட்டு இந்த வரலாற்று சாதனைக்கும் முக்கிய காரணமாகஇருந்துள்ளார் ரஸா. அயர்லாந்து அணி ஸ்கொட்லாந்துக்கு எதிராக ஆடிய போட்டியில் ஏறக்குறைய தொடரை விட்டு வெளியேறும் நிலையிலிருந்தது.

10 ஓவரில் 65-4 என்னும் இடத்திலிருந்து 174 ஓட்டங்களை அதே 4 விக்கெட் இழப்புக்கு 19 ஓவரில் துரத்தியடித்தது அயர்லாந்து. ஹவாழ்வா! சாவா?“ போட்டியில் கர்டிஸ் கம்ப்ஹர் ஆடிய அந்த மாபெரும் இனிங்ஸ் மீண்டும் அணிக்கு நம்பிகையைக் கொடுத்தது. அந்த நம்பிக்கையைத் தக்க வைத்து அடுத்த போட்டியில் மேற்கிந்தியாவை எளிதில் வென்று இப்போது அடுத்த சுற்றில் விளையாடக் காத்திருக்கிறது அயர்லாந்து.

குழு ஏ -இல் இலங்கை மற்றும் நெதர்லாந்து அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. இலங்கை முதல் போட்டியில் சற்று சறுக்கினாலும் அடுத்த இரண்டு போட்டிகளை வென்று சுப்பர் 12 சுற்றில் காலடி எடுத்து வைத்துள்ளது. அதுவும் அவ்வளவு எளிதாக நடக்கவில்லை.

கார்த்திக் மெய்யப்பனின் அபார மான ஹட்-ட்ரிக்கெல்லாம் வழியில் பெரும் தடையாக வந்து நின்றது.

நெதர்லாந்து இரண்டு த்ரில் போட்டிகளை வென்றது. அதில் மூன்று போட்டிகளிலும் சகலதுறையிலும் கலக்கி அடுத்த சுற்றுக்கு வழி வகுத்தவர் பாஸ் டி லீட். நமீபியாவின் கடைசி போட்டியில் வெற்றிக்கு கடைசி வரை போராடிய டேவிட் வெயிஸ், வெற்றியை பெற்றுத் தராவிட்டாலும் அணியின் உத்வேகத்தை களத்தில் காட்டாமல் வெளியே செல்லவில்லை. அதே போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி உலகக் கிண்ண வரலாற்றில் தன் முதல் வெற்றியை பெற்றது.

நமீபியாவுக்கு வருந்துவதா இல்லை ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்காக மகிழ்வதா? இரு அணிகளும் சிறப்பாக செயல்பட்டு நமக்கு ஏற்படுத்தும் இந்த உணர்வு தான் விளையாட்டின் கரு!

இதற்கு மேல் தகுதி பெற்ற மூன்று இணை அணிகளும் தொடரில் ஒரு வெற்றியாது பெறுவார்களா என்பது சந்தேகம்தான். ஆனால், இந்த சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதி பெற எல்லா அணிகளும் காட்டிய போராட்ட குணமே நம் மனதில் நிலைத்திருக்கும். இதுவே, காயமடைந்தபோதும் களத்தில் ஓட்டம் எடுத்த இணை அணிகளுக்குக் கிடைத்த வெற்றி. அவர்கள் ஆட்டத்திலும் வெல்லும் காலம் வரும்.

**நமீபியாவுக்கு வருந்துவதா இல்லை ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்காக மகிழ்வதா? இரு அணிகளும் சிறப்பாக செயல்பட்டு நமக்கு ஏற்படுத்தும் இந்த உணர்வு தான் விளையாட்டின் கரு!**



# உலக மறைபரப்பு தினம்

## நமக்கு உணர்த்துவது எதனை?

**அருட்திரு.றேஜிஸ் இராசநாயகம் அடிகளார்**




"நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள்" இதுவே இந்த ஆண்டிற்கான மறை பரப்பு தினத்தின் கருப்பொருள்.

நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள் என்பது ஆண்டவர் யேசுவால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு மகத்தான பொறுப்புமிக்க பணி. இறைவனது மீட்புத் திட்டத்திற்கு மனிதனும் தனது பங்களிப்பை செய்ய இயேசு பணித்துள்ளார். இப்பணி திருநிலையினருக்கு மட்டுமன்றி பொதுநிலையினருக்கும் கொடுக்கப்பட்ட பணி. பொதுநிலையினர் எத்துறையில் பணி புரிந்தாலும் அது விவசாயியோ, விரிவுரையாளரோ, பொருளியியலாளரோ தத்தம் பணிசார்ந்த துறைகளிலும் வாழ்வுச் சூழலிலும் இந்த மறைபரப்பு பணியை செய்ய பணிக்கப்படுகின்றனர். இயேசு கொடுத்த அடிப்படைக் கட்டளை "ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்" என்பது அதனை திருத்துாதர்களும் தொடக்க காலத்தில் திருச்சபையின ரும் செய்தனர். இப் பணியை முன்னெடுக்கவே நாம் அனைவரும் பணிக்கப்படுகின்றோம்.




கடவுளுக்கு சான்று பகர்தல் விவிலிய முறைப் படி எத்தகைய அர்த்தங்க ளைக் கொண்டது என்ப தையும் இவ் அழைப்பைப் பெற்றவர்கள் எப்படித் தங்களின் துன்பங்களை இறப்பு வரையிலும் ஏற்று நம்பிக்கைக்கு சான்றாக வாழ்ந்தனர் என்பதையும் நம் மனக்கண்முன் கொண்டுவருவது சாலச் சிறந்தது. புதிய ஏற்பாட்டில் சாட்சியாக இருக்கவேண்டியதன் கருப்பொருள் யேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்தலே.

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்: தந்தை மகன் துாயஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்.. இதோ உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" என்று இயேசு ஒரு பணியைக் கொடுப்பது மட்டுமல்ல தாம் நம்மோடு இருப்பதான உறுதிப்பாட்டையும் கொடுக்கின்றார். திருத்துாதர்களின் சான்று யேசுவின் உலக வாழ்வு முழு வதற்கும் அவர் செய்த மீட்புச் செயலுக்கும் பாடு கள், இறப்பு, உயிர்ப்பிற்கும் உரியதாய் இருந்தது. இதற்கான வலுவை துாயஆவியார் வழங்குவார் எனவும் உறுதி தரப்பட்டது.

"ஏனெனில் நீங்கள் பேசவேண்டியவற்றை துாயஆவியார் அந்நேரத்தில் உங்களுக்கு கற்றுத் தருவார்"- லுாக் 12:11-12. துாய ஆவியாரின் பலத்திலும் வல்லமையிலும் திருத்துாதர்கள் சான்று பகர்ந்தனர். அதற்காக தமது உயிரையும் தியாகம் செய்தனர். இத்தகைய திரண்டுவரும் மேகம் போல் உள்ள சாட்சியத்தால் மக்கள் துன்பங்கள் மத்தியில் நம்பிக்கையில் பற்றுறுதியாக இருந்தார்கள்.

இன்று நாம் நமது வாழ்வு சூழலில் வார்த்தையை விட மேலானதாக நமது வாழ்க்கையால் சான்று பகர பணிக்கப்படுகின்றோம். பல்வேறுபட்ட சமூகப் பிறழ்வுகளால் சீரழிந்து கொண்டிருக்கும் இன்றைய உலகின் மத்தியில் நமது வாழ்வு குன்றின் மேலே ஏற்றிய தீபம் போலும் பொய்மைகள் மலிந்த உலகில் " உண்மைக்குச் சான்று பகரவும் பணிக்கப்படுகின்றோம்" தி.ப.20 வது கூறுவது போல " நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது" எனவே இன்று நமது சாட்சிய வாழ்விற்கு அடிப்படையானது கிறீஸ்தவ அனுபவம்.வாழ்விலும் சரி வழிபாட்டிலும் சரி நாம் கண்டதையும் கேட்டதையும் அதாவது நாம் அனுபவித்ததை வெளிப்படுத்தாமல் சான்று பகராமல் இருக்க முடியாது.

அடிப்படையில் அவரவர் தம் வாழ்வின் கடமைகளை அடுத்தவர் முன் செயலில் காட்டுவதும் மறைபரப்புப் பணியே.

---




# வியுக்தியார் பதில்கள்

**கே. தில்லைநாதன், இணுவில், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

வடக்கு கிழக்கு குடிப்பரம்பலை மாற்றியமைக்க சதி நடப்பதாக அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக தமிழ் கட்சிகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். நமது அங்கஜன் ராநாதன் அதற்கு எதிராக அறிக்கை விடுக்கிறார். டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் பேசுகிறார். ஆனால் நமது தமிழ் தேசியத் தலைவர்கள் யாரும் அதுகுறித்து கதைப்பதாக தெரியவில்லையே?

**வியுக்தியார்:**

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் அதன் ஆளும்கட்சியான ஈபிஆர்எல்எவ் கட்சியினால் அமைச்சராக நியமிக்கப்பட்டவர் இந்த தயான் ஜயதிலக. அந்த நன்றிக்கடனில் அந்த எச்சரிக்கையை விடுத்திருக்கலாம். அங்கஜன் தான் அங்கம் வகிக்கும் கட்சி ஆட்சியிலிருந்தபோதும் இப்படி குடிப்பரம்பலை மாற்ற முயன்றபோது பார்த்துக்கொண்டிருந்தவர். இப்போது அதற்கு எதிராக குரல்கொடுப்பது எதற்காக என்பதை புரிந்துகொள்வீர்கள்தானே. டக்ளஸ் எப்போதும் இதுகுறித்து பேசுபவர்தான். ஆனால் நமது தமிழ் தேசியத் தலைவர்கள் இவற்றையெல்லாம் தடுப்பதற்காகத்தானே சமஷ்டிதான் வேண்டும் என்கின்றார்கள். சமஷ்டி கிடைத்த பின்னர் அவற்றையெல்லாம் பார்க்கலாம் தானே என்று பொறுத்திருக்கிறார்கள் அவ்வளவுதான்.

---

**சி.நியூட்டன், பார் வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:**

எந்த நேரத்திலும் தேர்தலைச் சந்திக்க தாம் தயாராக இருப்பதாக பொதுஜனபெரமுன கட்சியினர் தொடந்து கூறிவருகின்றனரே. என்ன துணிவில் இப்படிக் கூறுகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:**

வேறு ஒன்றுமில்லை. எதிர்க்கட்சியினர் இன்னமும் தேர்தலுக்கு றெடி இல்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியை கொஞ்சமாவது ரணில் தீர்த்தபின்னர் தேர்தலுக்கு செல்லத்தான் எதிர்க்கட்சி விரும்புகின்றது. இல்லையென்றால், பொதுஜனபெரமுன தேர்தலுக்கு தயார் என்கின்றபோது, எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் அவர்களுடன் சேர்ந்து பொதுத்தேர்தலுக்கு செல்கின்ற முடிவை எடுக்கலாமே. அவர்கள் அப்படி கேட்காததால்தான், பொதுஜன பெரமுனவினரும் துணிந்து தேர்தலுக்கு தாங்கள் தயார் என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன்.

---

**எஸ். சதீஸ், சில்லாலை, பண்டத்தரிப்பு.**

**கேள்வி:**

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனரே. இதனை நல்லதொரு ஆரம்பமாக எடுக்கலாமா?

**வியுக்தியார்:**

இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்தவர்களும் இப்படி பொதுமன்னிப்பை வழங்கியிருக்கலாம் தான். அப்படி அவர்கள் செய்திருந்தால், விடுதலையானவர்கள் இன்று பல வருடங்களை தமது குடும்பங்களுடன் கழித்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அப்படி விடுதலை செய்தால், தமது அரசியல் எதிர்காலத்திற்கு பாதிப்பு வந்துவிடுமோ என்ற பயம் அவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அப்படி எந்த பயமும் இருக்காதுதானே. மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்திருந்தால், அவர்களின் ஆதரவை இழக்கவேண்டிவந்துவிடுமோ என்று பயம் வந்திருக்கும். ஆனால் அவர் அப்படி விடுதலை செய்வது அவர் மீது சர்வதேசத்திற்கு இன்னும் நம்பிக்கை ஏற்படும். இது இன்றைய நிலையில் நல்ல ஆரம்பம்தானே.

---

**கே. லோஜிதன், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தமிழகத்திற்கு சென்று கமல்ஹாசன், குஷ்பு, சீமான் என்று சினிமா நட்சத்திரங்களை சந்தித்திருந்தாரே. எதற்காக இப்படி திடீரென்று சென்றுவந்திருக்கிறார் என்று உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?

**வியுக்தியார்:**

அவர் என்ன படம் தயாரிப்பதற்காகவா இவர்களைச் சந்தித்திருந்தார்? அவர்கள் எல்லோரும் நடிகர்கள் என்றாலும் அரசியல்வாதிகளும்தானே. அரசியல் தலைவர்களைச் சந்தித்து நமது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டுவது நல்லதுதானே. அவர் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக்கூட்டம் டிசம்பரில் நடக்கவிருக்கின்றது அல்லவா. கட்சிக்கு புதிய தலைவர் தெரிவுசெய்யப்படவிருக்கிறது. தலைவருக்ககான போட்டியில் அவரும் இறங்கவிருக்கிறாரோ தெரியவில்ல. அவரது இந்த நகர்வுகளைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகின்றது.

---

**டி. பிரசாத், கொட்டகல, ஹற்றன்.**

**கேள்வி:**

கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசைக் கவிழ்க்கும் சூழ்ச்சியை பஸில் ராஜபக்ஷதான் மேற்கொண்டார் என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:**

கோட்டாபயவை ஆட்சிக்கு கொண்டவருவதற்கு முக்கிய பங்காற்றியவர்களில் அவரும் ஒருவரல்லவா. அதுதான், கோட்டாபய அரசு அவரின் தவறான முடிவுகளால் கவிழவில்லை என்று சொல்லி தன்னை பாதுகாக்க முயற்சிக்கிறார் அவ்வளவுதான்.

# புதுமையின் புது வடிவம்

குப்பிளான் ஆ.மோகனசுந்தரம்



அதிகாலை ஐந்து மணிக்கு எழும்பிய சங்கர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தான். அப்போது நேரம் காலை ஆறு பத்து. காலைச் சூரியன் கடல் அலைகளில் மிதந்து வருவது போல் சூரியோதயம் சங்கரின் கண்களுக்கு தோன்றியது.

சங்கரின் வீடு கடற்கரைக்கு அண்மையில் இருந்த மையால், சங்கர் நாளாந்தம் சூரிய உதயத்தை காலையில் பார்த்து மகிழ்வான். ஆனால் இன்று அவனுக்கு சூரிய உதயம் புதுமையாக தென்பட்டது. சங்கருக்கு இப்போது பதின்நான்கு வயது. வயது பதின்நான்காக இருந்தபோதும், அவன் பதினெட்டு வயது இளைஞன் போன்று உடற் கட்டமைப்பைக் கொண்டிருந்தான். சங்கர் ஐந்தடி ஏழு அங்குலம் உயரம் உடையவன். அவனது உயரத்துக்கேற்ப உடலும் மொத்தமாக இருந்தது. தமிழ் சினிமாவில் வரும் இளம் கதாநாயகர்கள் போன்று சங்கர் கவர்ச்சியாக தோற்றமளித்தான். சங்கர் சிறுவயதிலிருந்தே தன்னை அலங்கரித்து கொள்வதில் கூடிய நேரத்தை செலவிட்டு வந்தான்.

சங்கரின் பெற்றோர்கள் கடற் தொழில் செய்பவர்கள். சங்கரின் தந்தை மற்றவர்களின் போட்டில் உதவியாளராக செல்வார். அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதி தண்ணியாகவே போய்விடும். தண்ணீரில் தேடிய வருமானத்தில் பெரும்பகுதி தண்ணீராய் போனது. அவருடைய வருமானத்தில் சிறு பகுதியையே வீட்டுச் செலவுகளுக்காக கொடுப்பார்.

சங்கரின் தந்தை தருமு என அழைக்கப்படுவர் தருமு இளவயதிலேயே சரோஜா என்பவளை காதலித்து திருமணம் செய்துகொண்டார். தருமுவும் சரோஜாவும் குடும்ப கட்டுப்பாடு திட்டங்களுக்கு அடிபணியாதவர்கள். இதனால் அவர்களது வீட்டில் வருடா வருடம் குழந்தைகள் பிறக்கும். அவர்களில் சிலர் எதிர்கால சந்ததிகளாக உயிர்வாழ்வர். மற்றையோர் பிரசவ காலத்திலோ அல்லது ஒரு வருடத்துக்கு உள்ளேயோ காணாமல் போய்விடுவர். அப்படியான சூழலில் தருமுவுக்கும் சரோஜாவுக்கும் ஐந்தாவது குழந்தையாக பிறந்தவன்தான் சங்கர். சங்கர் ஐந்தாவது பிள்ளையாக பிறந்தாலும், வீட்டில் இரண்டாவது பிள்ளை என்ற ஸ்தானத்தை தக்கவைத்துக் கொண்டான். சங்கருக்கு கிருணி என்றொரு அக்கா இருந்தாள். அவளும் இரண்டாவதாக பிறந்தாள். ஆனால் முதலாவது பிள்ளை என்ற நிலையில் இருந்தாள்.

தருமு – சரோஜா தம்பதிகளுக்கு பிறந்த பன்னிரண்டு பிள்ளைகளில் ஐந்து பிள்ளைகளே அவர்களது வம்சத்தை நிலைநிறுத்துவதற்காக இருந்தனர். ஏழு பிள்ளைகளில் நான்கு பிள்ளைகள் உலகை பார்த்த பின்னர் மறைந்து போயினர். மூன்று பிள்ளைகள் உலகத்தை பார்க்காமலே காணாமல் போய்விட்டனர். இவ்வாறான போராட்டத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டவள் சரோஜா தான். அவள் வருடாந்தம் சில மாதங்களை வைத்தியசாலைகளில் கழித்தாள். இவ்வாறு பிள்ளைகளை பெற்றுக்கொள்வதால் சரோஜா பாதிக்கப்பட்டாலும், அவள் திடகாத்திரமாகவும் அழகாகவும் இருந்தாள். அவர்களுக்கு தாராளமாக கிடைக்கின்ற மீன் உணவின் தாற்பரியமே சரோஜாவை வாழ வைத்துக்கொண்டு இருந்தது.

சரோஜாவும் சாதாரணமானவள் அல்ல. சரோஜா காதல் திருமணம் செய்தாலும், அவளுக்கு பெற்றோரிடமிருந்து மூன்று லட்சம் ரூபா காசு கிடைத்தது. இதில் அரைவாசியை அவள் தருமுவின் சம்மதத்துடன் வங்கியில் நிலையான வைப்பில் போட்டிருந்தாள். அதிலிருந்து வந்து வட்டியை மாதம் மாதம் பெற்று குடும்பச்சுமையில் ஒரு பகுதியை தீர்த்து வந்தாள்.

தருமுவின் மூதாதையர்கள் ஓரளவு வசதியானவர்கள். நில உரிமை கொண்டவர்களாக இருந்தனர். அவர்களின் பின் வந்த வம்சாவழியினரால் அந்த நிலவுரிமை ஓரளவு அழிவடைந்து போயிற்று. இவ்வாறான நிலையிலும் தருமுவுக்கு ரோட்டோரத்தில் நான்கு பரப்புக் காணி துண்டொன்று சொந்தமாக இருந்தது. அக்காணியிலேயே அவர்கள் சிறிய கல்வீடொன்றை அமைத்து வாழ்ந்தனர்.

அக் காணியில் ரோட்டு பக்கமாக சரோஜா சிறிய கடை ஒன்றை அமைத்தாள். இதற்கு பெற்றோரின் அன்பளிப்பு பணத்தை பயன்படுத்தினாள். அதில் அவள் கணவனின் உதவியுடன் மீனை வாங்கி சில்லறை வியாபாரம் என்ற முறையில் விற்பனை செய்தாள். இதனால் அவளது செலவுகள் போக மிகுதியாக குறிப்பிட்டளவு லாபம் கிடைத்தது. அதில் அவள் தனது வீட்டுச் செலவுக்காக ஒரு பகுதியை எடுத்தாள். மிகுதியை வங்கியில் சேமித்து வந்தாள். சரோஜாவின் தாய் குண்டுமணி சரோஜாவுக்கு சிறுவயதிலிருந்தே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி இருந்தாள். அதனால் பல சந்தர்ப்பங்களில் நன்மை அடைந்த சரோஜா தொடர்ந்தும் சேமிப்பு பழக்கத்தை பின்பற்றி வந்தாள்.

சங்கர் அழகாக தன்னை அலங்கரித்துக் கொண்டாலும், வேலை செய்வதிலும் விண்ணன் என்று பெயரை பெற்றிருந்தான். சங்கர் பதின்நான்கு வயதுடன் தனது பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாயிற்று. ஆறாம் வகுப்பு வரை அவன் எவ்வாறோ ஒவ்வொரு வருடத்திலும் ஓரளவு புள்ளிகளை பெற்று வகுப்பேற்றம் செய்யப்பட்டிருந்தான். ஆறாம் வகுப்பின் போது அவனது எண்ணங்கள் கூடுதலாக விளையாடுவதிலும் உல்லாசமாக பொழுது போக்குவதிலும் இன்பம் கண்டது.

சங்கருக்கு சிறுவயதிலிருந்தே தாய்மொழியில் உள்ள எழுத்துக்களையும் சொற்களையும் இனங்காண்பதற்கு சரியாக வழி காட்டப்படவில்லை. சங்கரின் பெற்றோர்களும் உறவினர்களும் கல்வியறிவு குறைந்தவர்களாகவே இருந்தனர். சங்கர் சரியான முறையில் முன்பள்ளிக் கல்வி கற்பதற்கும் அனுப்பப்படவில்லை. எனினும் குறிப்பிட்ட காலத்தில் பாடசாலையில் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

அவனது வகுப்பில் முப்பது பிள்ளைகளுக்கு மேல் இருந்தனர். இதனால் அவனது ஆசிரியையினால் அவனுக்கு முழுமையாக உதவ முடியவில்லை. இதனது தாக்கம் ஆறாம் வகுப்பில் அவனது கற்றலை பாதித்தது. இதனால் கல்வியில் வெறுப்பு அடைந்தான். வகுப்பில் ஆசிரியர் கற்பிப்பதும் அவனுக்கு விளங்கவில்லை. அடிக்கடி ஆசிரியர்கள் கொடுக்கும் பயிற்சிகளை சரியான முறையில் செய்ய முடியவில்லை. இதனால் ஆசிரியரின் தண்டனைகளுக்கு ஆளாக வேண்டி இருந்தது.

இந்த நிலையில் பிள்ளைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாத அதிபரும் அவரது அடிவருடிகளும் சங்கரை இரண்டு வருடங்கள் வகுப்பேற்றம் செய்யவில்லை. சங்கரின் பெற்றோர் எவ்வளவோ காரணங்களை கூறி பாடசாலையில் தமது மகனை அடுத்த வகுப்புக்கு அனுமதிக்குமாறு மன்றாடினர். இரக்கமற்ற அதிபர் தனது பாடசாலை பெறுபேற்றை கல்வி அதிகாரிகளுக்கு உயர்த்திக் காட்டுவதற்கு பேராசை கொண்டிருந்தார். அதனால் அவர் வகுப்பேற்றம் செய்வதற்கு சம்மதிக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் சங்கர் தனது பாடசாலைக்கு முழுக்குப் போடுவதை பெற்றோரானாலும் தடுக்க முடியவில்லை.

இப்படியான சூழ்நிலையில் கடற் தொழிலுக்கு சென்ற சங்கர் சிறந்த ஒரு உழைப்பாளியாக மாறினான். அவனது வேலை செய்யும் சிறப்பினால் அவனுக்கு அதிக வருமானம் கிடைத்தது. தன்னுடைய வருமானத்தில் கணிசமான பகுதியை தாய் சரோஜாவிடம் கொடுத்தான் மிகுதியை தனது நண்பர்களோடு சேர்ந்து உல்லாசமாக பொழுது போக்குவதற்காக பயன்படுத்தினான். இந்த நிலமையில் சிறிதுகாலத்தில் சங்கர் மதுவுக்கு அடிமையானான். தனது வாழ்க்கையையே முடிக்கும் அளவுக்கு மதுவினால் பாதிக்கப்பட்டிருந்தான்.

இந்த சந்தர்ப்பத்தில் துன்பத்திற்கு பின்னர் வரும் இன்ப நிகழ்வு போன்று, ஒரு சம்பவம் இடம்பெற்றது. பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் படித்த ஊர்மிளா என்ற பெண்ணுடன் சங்கருக்கு பழக்கம் ஏற்பட்டது. ஊர்மிளா சங்கரை விட மூன்று வயது குறைந்தவளாக இருந்தாள். அவள் சங்கரின் அழகில் ஏற்கனவே மயங்கி இருந்தாள். அதேநேரம் சங்கரும் ஊர்மிளாவின் கவர்ச்சியான தோற்றத்தினாலும், அவளது அன்பான பேச்சினாலும் அவளிடம் தன்னை இழந்திருந்தான்.

சங்கர்,

“ஊர்மி, உன்னுடன் பழகத் தொடங்கிய பின்னர் எனது வாழ்க்கையே மாறிவிட்டது. உன்னை பார்ப்பதிலும், உன்னுடன் பேசுவதிலும் நான் உலகத்தையே மறக்கிறேன். உன்னை காணாத சந்தர்ப்பத்தில்,நான் உன்னை எனது மனதில் நினைக்கும் போது என் எண்ணங்கள் பச்சைக்கிளியைப் போன்று பறந்தோடுகிறது. நீ எப்போதும் என்னுடன் இருப்பாயா? ஆயுள் முழுவதும் நான் உன்னை பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று எனது உள்ளம் ஏங்குகின்றது.”

ஊர்மிளா,

“சங்கர், நான் உங்களோடு பேச தொடங்கிய பின்னர் என் நினைவுகள் அனைத்தும் உன்னையே சுற்றி வருகிறது. உண்பதற்கு உணவு கிடைக்கும்போது, உன்னை நினைக்கையில் நீ எனக்கு ஊட்டி விட மாட்டாயா என்று என் நெஞ்சம் ஏங்குகிறது.”

இவ்வாறு அவர்கள் இருவரும் உலகத்தை மறந்து தங்களிடையே உரையாடி உண்மையான காதலர்களாய் உலா வந்தனர். ஆனால் அவர்கள் ஒளிவுமறைவான இடங்களில் மறைந்திருந்து சந்தித்தே தங்களது அன்பு நெஞ்சங்களின் உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர்.

எனினும் ஊர்மிளாவின் பெற்றோர்கள் இதனை அறிந்து கொண்டனர். ஊர்மிளாவின் தந்தை மயிலர் மகள் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தார். மயிலருக்கும் கமலிக்கும் ஊர்மிளா ஒரே பெண்ணாக இருந்தாள். அவர்கள் ஊர்மிளாவுக்கு புத்திமதி கூற முயன்றனர்.

மயிலர்,

“மகள் நீ எங்களுக்கு எவ்வளவு செல்லப்பிள்ளையாக இருக்கிறாய். உனது வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நீ ஏன் அந்த மோசமான பெடியனுடன் கதைத்து திரிகிறாய்.” என்று கேட்டார்.

ஊர்மிளா,

“அப்பா இது என்னுடைய வாழ்வு சம்பந்தப்பட்ட விடயம். உங்களுக்காக நீங்கள் விரும்புகின்ற ஒருவனுடன் என்னால் வாழ முடியாது. எனக்கு விருப்பமான வரை தெரிவு செய்வதற்கு எனக்கு உரிமை உள்ளது.” என்று கூறினாள்.

தாய் கமலி,

“மகள் உனக்கு பொருத்தமானவன் ஒருவன் என்றால் நாங்களும் சந்தோசம் அடைவோம். சங்கர் அப்படியான நிலையில் இல்லையே” என்று கூறினார்.

ஊர்மிளா,

“அம்மா நீங்கள் எவ்வாறு அவரை எனக்கு பொருத்த மற்றவர் என்று கூறலாம். அம்மா அவர் என்னை மிகவும் விரும்புகிறார். நானும் அவரை மிகவும் நேசிக்கிறேன். எங்களிடம் மனப்பொருத்தம் இருக்கின்றது. நீங்கள் இதற்கு சம்மதித்து எங்களை வாழ அனுமதிக்க வேண்டும். இல்லாவிடில் நானே எனது வாழ்க்கை பற்றி தீர்மானிக்க வேண்டி இருக்கும்.” என்றாள்.

மயிலர்,

“மகள் நீ இவ்விடயத்தில் தீவிரமாக இருப்பது நன்றாக தெரிகிறது. ஆனால் நான் இதற்கு சம்மதிக்க மாட்டேன். உனது அம்மா அவவுக்கு விரும்பியவாறு தீர்மானம் செய்யலாம். எதற்கும் நான் பொறுமையுடன் உனது செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டு இருப்பேன்.” என்றார்.

அடுத்த நாள் சங்கரை சந்தித்த ஊர்மிளா தாய் தந்தையருடன் தான் வாதாடிய விடயத்தை கூறினாள். இயற்கையாகவே நல்ல குணமுடைய சங்கர் உடனடியாக தனது மனதுக்குள் ஒரு தீவிரமான தீர்மானத்தை நிறைவேற்றினான். “ஊர்மிளாவை நான் கண் கலங்காதே எப்போதும் காப்பாற்றுவேன். அவளுக்காக நான் எந்த தியாகத்தையும் செய்வேன்.” என்பதே அதுவாகும். உடனே சங்கர் அவளிடம் கேட்டான். “இன்று இரவு ஒரு மணிக்கு நான் உனது வீட்டுக்கு வருவேன். நீ என்னுடன் வருவதற்கு தயாராய் இருப்பாய் தானே.”

ஊர்மிளா,

“உன் மீது நான் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளேன். உனது விருப்பப்படியே செய்கிறேன்.” என்றாள்.

அதன்பின் வீடு சென்ற சங்கர் தாயிடம் இந்த விடயத்தைக் கூறி “நான் எப்படியும் இன்று ஊர்மிளாவை கூட்டிக் கொண்டு போகப் போகிறேன்.” என்றான்.

தாய் சரோஜாவுக்கு மகிழ்ச்சி. தனது மகன் ஒரு பெண்ணுக்கு வாழ்வளித்து அவளை வாழ வைப்பதற்கு துணிந்து விட்டான்” என்று மனம் மகிழ்ந்தாள். தன்னிடமிருந்த ஐம்பதாயிரம் ரூபாவையும் மகனிடம் கொடுத்து, “நீ ஒரு குழப்பமும் இல்லாமல் இருந்துவிட்டு, இரவோடு இரவாக சென்று விடு.” என்றாள்.

சங்கர் தனது நண்பன் ராகவனுக்கு தொலைபேசி மூலம் அறிவித்துவிட்டு, அவனது வரப்பு என்ற கரையோர கிராமத்துக்கு ஊர்மிளாவை அழைத்துச் சென்றான். பத்து வருடங்களின் பின் சங்கர் தனது உழைப்பினால் சேமித்த பணத்தையும் தாயின் வீட்டை ஈடு வைத்து பெற்ற பணத்தையும் கொண்டு இயந்திரப் படகு ஒன்றை வாங்கினான். அதனை வெள்ளோட்டம் விடுவதற்கான திகதியையும் தீர்மானித்தான்.

பின்னர் அடுத்த நாள் நெஞ்சு வலியால் அவதிப்பட்ட ஊர்மிளாவை டாக்டரிடம் அழைத்துச் சென்றான். அவர் சில பரிசோதனைகளை செய்துவிட்டு அதன் பிரதிபலனை தெரிவிப்பதற்காக குறித்த தினம் ஒன்றில் மாலை நேரம் வருமாறு கூறினர் அன்றுதான் சங்கர் புதிய இயந்திரப் படகு வெள்ளோட்டம் விடுவதற்காக தீர்மானித்திருந்தான் பின்னர் குறித்த நாளில் சங்கர் தனது புதிய இயந்திரப் படகினை வெள்ளோட்டம் விட்ட பின்னர் மாலையில் வீட்டுக்கு வந்தான். ஊர்மிளா மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்று தான் அன்று தயாரித்த இனிப்பு பலகாரங்களை கொடுத்து சாப்பிடுமாறு கூறினாள்.

சங்கர் பலகாரங்களை தின்று கொண்டு இருந்தபோது, அவனது கண்ணில் ஊர்மிளாவின் மருத்துவ அறிக்கை தென்பட்டது. அதனை எடுத்துப் பார்த்தான். அதில் ஊர்மிளாவுக்கு புற்றுநோய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. சங்கர் ஏக்கத்துடன் ஊர்மிளை பார்த்தான். அவள் சிரித்த முகத்துடன் சங்கரை பார்த்துக்கொண்டே இருந்தாள்.

(யாவும் கற்பனையே)

# சீன இரும்புத் திரையால் மறைக்கப்படும் திபெத்:

## “திபெத்” சுதந்திர வாசல் திறக்குமா? தலாய்லாமா அகிம்சை வழி வெல்லுமா??

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சீனாவின் நீண்ட கால அடக்கு முறைகளுக்கு எதிராகவும், திபெத் ஒரு தனி சுதந்திர நாடு என்று கூறி திபெத்தியர்களின் போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பௌத்த மதம் தழைத்தோங்கி இருக்கும் திபெத்தில், கடந்த 70 ஆண்டுகளாக சீனாவுக்கு எதிராக தங்களது போராட்டத்தை திபெத்தியர்கள் முன்னெடுத்து வருகிறார்கள்.

**திபெத் தனி நாடா ?**

1950-ஆம் ஆண்டு காலகட்டத்திலிருந்து இந்தப் போராட்டம் இன்று வரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. திபெத் தனி நாடா அல்லது சீனாவின் ஒரு பகுதியா இப்படிக் கேள்வி எழுப்பும் மனநிலைக்கு திபெத்திய மக்கள் வந்துவிட்டார்கள். இந்த நீண்ட நெடிய போராட்டத்தின் உண்மை முகம் உலகறிந்த விடயமாகும்.

திபெத் ஏறத்தாழ 4,900 மீட்டர் (16,000 அடி) ஏற்றம் கொண்ட இந்தப் பகுதி, உலகின் மிக உயரத்தில் அமைந்தது என்பதால் இதனை “உலகத்தின் கூரை” என்றும் பொதுவாக குறிப்பிடுவார்கள்.

சீனாவில் உள்ள 5 தன்னாட்சி பிரதேசங்களில் திபெத் தன்னாட்சி பிரதேசமும் ஒன்றாகும். எல்லை கோட்டின் மொத்த நீளம் சுமார் 4000 கிலோமீட்டராகும். முழு நிலபரப்பு 12 இலட்சத்து 20 ஆயிரம் சதுர கிலோமீட் டராகும். சீனாவின் மொத்த நிலபரப்பில் திபெத் 12.8 வீதமாகும்.

7-ஆம் நூற்றாண்டில் தனி சாம்ராஜ்யமாக இருந்த திபெத், பின்னாளில் கிழக்கு ஆசியாவை ஆண்ட குயிங் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக மாறியது. இந்தப் பேரரசின் ஆளுகையில் இருந்தபோதுதான் திபெத்தின் ஆட்சிக்கு துணை புரிய தலாய்லாமாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இப்படி காலம் காலமாக தலாய்லாமாக்கள் ஆண்டுவந்த திபெத் பகுதி, குயிங் வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு 1913-ஆம் ஆண்டு சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. முறையான அரசு அமைப்புடன், தலாய்லாமா நிர்வாகத்தின் கீழ் இருந்த திபெத்தை, 1950-ஆம் ஆண்டு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது சீனத்து செம்படை. அந்த நேரத்தில் பதின்ம பருவத்திலிருந்த தற்போதைய தலாய்லாமா இந்தச் சூழலை சரியாகக் கையாள முடியாத நிலையில் தவித்தார்.

**சுதந்திர நாடு போராட்டம்**

17 அம்சங்கள் கொண்ட உடன்படிக்கை ஒன்றை 1951-இல் திபெத் அரசுடன் சீனப் படை மேற்கொண்டது. அதன்படி திபெத்தில் கட்டுப்பாடுகளற்ற அதிகாரத்தை சீனப் படை பெற்றது. திபெத்தின் பிரபுக்களும், பாட்டாளிகளும் சீனப் படைக்கு ஒத்துழைத்தாலும், நிலச் சீர்திருத்தங்களாலும், புத்த மதம் தொடர்பான சண்டைகளாலும் பல வன்முறைகள் வெடித்தன.


இதனால் தூண்டப்பட்ட மக்கள் 1959, மார்ச் 10-ஆம் தேதியன்று தலாய்லாமா வசிக்கும் லாஸ் வீட்டின் அருகே ஒன்று கூடினர். நாட்டை விட்டு தலாய்லாமா தப்பிக்க வழி செய்து சீனப் படைகளை எதிர்த்து கடுமையான சண்டையில் ஈடுபட்டனர்.

**தலாய்லாமா தப்பித்து இந்தியா வருகை:**

இந்தச் சண்டையை சீன ராணுவம் தனது அசாத்திய படைபலத்தால் அடக்கினாலும், தலாய்லாமா தப்பித்து இந்தியா வருவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. அதற்கான மிக முக்கிய காரணம், திபெத் மக்கள் தங்கள் ஆன்மீக தலைவரைத் தப்பிக்க வைக்க மேற்கொண்ட முயற்சிகளே.

1959-ஆம் ஆண்டு மார்ச் 30-இல் இந்தியாவுக்கு தலாய்லாமா வந்தார். அதன் பிறகு இந்தியாவிலிருந்தபடியே அவர் திபெத்தின் நாடு கடந்த அரசை நிர்வகித்து வருகிறார். ஆனால், திபெத் தனி நாடு இல்லை எனவும், தங்களுடைய நாட்டின் ஒரு பகுதிதான் எனவும் இன்றுவரை சீனா கூறி வருகிறது.

ஜூலை 6, 1935 இல் பிறந்த ஜெட்சுன் ஜம்பேல் நவாங் லொப்சாங் யெஷெ டென்சின் கியாட்சோ, திபெத்தின் 14வது தலாய் லாமா ஆவார். இவர் திபெத் மக்களின் பலம் மிகுந்த ஆன்மீக அரசியல் தலைவர் ஆவார்.




அத்துடன் தியானம் குறித்த பரிசோதனைக்கூட ஆராய்ச்சிகளிலும் தமது ஒத்துழைப்பை வழங்கியிருக்கிறார். இவர் 1989 ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசை பெற்றவர்.




ஆனால், திபெத்தியர்களோ சீனாவின் கட்டுப் பாட்டில் இருக்க முடி யாது என வும், திபெத் தனி நாடு தான் எனவும் கூறி சீனாவை எதிர்த்து வரு கின்றனர். இதற்கான போராட்டம் இன்றள வும் திபெத்தில் தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறது.

சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டுமெனவும், சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டுமெனவும் திபெத் மக்கள் போராடி வருகின்றனர். மிக மோசமான படிப்பறிவு விகிதம், சுகாதாரமற்ற சூழல், ராணுவ அடக்கு முறைகள் எனப் பல இன்னல்களைச் சந்தித்துவரும் திபெத் பகுதிக்கு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணி கள்கூட சீன அரசின் அனுமதியில்லாமல் செல்ல முடியாது என்பதே அதன் இன்றைய நிலையாக உள்ளது.

**திபெத்தியர்களின் கிளர்ச்சி**

1951-இல் திபெத்தை சீன மக்கள் குடியரசுடன் இணைத்த பின்னர், திபெத் நாடானது, 1955-இல் சீனாவின் ஒரு நிர்வாகப் பகுதியாக மாற்றப்பட்டது. இதனை திபெத்திய மக்கள் ஏற்காது தொடர்ந்து அமைதியாக எதிர்ப்பு தெரிவித்து வந்தனர், திபெத்தை தனி நாடாக அறிவிக்க கோரி கிளர்ச்சிகளை தொடங்கினர்.

ஆனால் ஜெனரல் தான் குவான்சான் தலைமையிலான சீன இராணுவத்தினர் 23 மார்ச் 1959 அன்று சீனாவிற்கு திபெத்தியர் களின் கிளர்ச்சியை போரிட்டு ஒடுக்கினர். இந்த கிளர்ச்சியில் 2,000 திபெத்தியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 85 ஆயிரம் முதல் 87 ஆயிரம் திபெத்தியர்கள் காயமடைந்தனர்.




1959-ஆம் ஆண்டு சீனாவிற்கு எதிரான திபெத்தியர்கள் நடத்திய கிளர்ச்சியை நினைவு கூறும் வகையில், திபெத்தியர்கள் வாழும் உலக நாடுகளில் ஆண்டு தோறும் மார்ச், 10 நாளான்று திபெத்தியர்கள் எழுச்சி நாள் மற்றும் 12 மார்ச் அன்று திபெத்தியப் பெண்களின் எழுச்சி நாளாக கொண்டாடப்படுகிறது.

**விடியலுக்குக் காத்திருக்கும் திபெத்தியர்கள்!**

பத்திரிகையாளர்கள், வெளிநாட்டினர் என யாரும் எளிதில் செல்ல முடியாத அளவுக்கு தனது அதிகார அரணால் அந்தப் பகுதியை சீன அரசு தனிமைப்படுத்தப்பட்ட ரகசியமாகவே பாதுகாத்து வருகிறது.

சீனாவை எதிர்த்து லட்சக்கணக்கான திபெத் மக்கள் பல ஆண்டுகளாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். திபெத்தில் ஒரு தேசிய இனம் தன்னுடைய சொந்த மண்ணிலிருந்து மற்றொரு அண்டை நாட்டால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, தீராத மன வேதனையைத் தொடர்ந்து அவர்களுக்கு அளித்துக் கொண்டே இருக்கிறது. சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள திபெத்திலிருந்து, கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் வெளியேறிக் கொண்டேயிருக்கிறார்கள்.

திபெத்தை தன் பகுதிக்கு உட்பட்டது என்று சீனா அறிவித்துக் கொண்டுவிட்ட நிலையில். தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரமாகவும், பண்பாட்டு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு தேசிய இனமாக வாழ்ந்ததற்கான அடையாளங்களை வல்லரசான சீனாவுடன் திபெத்தியர்கள் மீட்டுப் பெற முடியுமா என்ற கேள்வி தொடர்கிறது.




சீன ஆக்கிரமிப்பை திபெத்தியர்கள் ஒரு போதும் விரும்பவில்லை. கடந்த 70 ஆண்டுகளில் சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட திபெத்தியர் களை சீன ராணுவம் படுகொலை செய்திருக்கிறது. சுமார் 6,000-க்கும் மேற்பட்ட பவுத்த மடாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

உலகின் கூரையில் சொந்த மொழி, மதத்தைப் பின்பற்ற முடியாமல் அகதிகளைப் போன்று திபெத் மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் வேவு பார்க்கப்பட்டு, இன்றுவரை வேட்டையாடப்பட்டு வருகின்றனர். ஐ.நா. சபையோ, மேற்கத்திய நாடுகளோ சீனாவின் அத்துமீறல்களை கண்டிக்கவில்லை, தடுத்து நிறுத்தவில்லை. எப்படியாவது சீனாவிடம் இருந்து விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கை திபெத் மக்களிடம் கொழுந்துவிட்டு என்றும் எரிகிறது.

திபெத் மக்கள் தங்கள் பூர்வ குடிகளின் பண்பாட்டு அடையாளங்கள் அழிக்கப்படுவதன் மூலம், அந்த நாகரிகங்களும் அழிந்து விடுகின்றன.

இதை மீட்டெடுக்க முடியாத துன்பங்களிலிருந்து தங்களது அடையாளத்தை இழந்து வரும் மக்கள், தங்கள் வாழ்வாதாரத்துக்காக வேறு வழியின்றி வெவ்வேறு இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த நாடுகளில் மீதம் உள்ளோர் தங்கள் வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டும், சுதந்திரக் காற்று நம் பக்கம் வீசாதா என்று ஒரு விடியலுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| **பூக்கள்** | **பழங்கள்** | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**23.10.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**23.10.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இலங்கையில் பணவீக்கம் உச்சநிலையை அடைந்தது

## மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்

கொழும்பு, ஒக். 23

பணவீக்கம் உச்சநிலையை அடைகின்ற அதேவேளை இந்த மாதம் பொருட்களின் விலைகள் குறைவடையலாம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதியை சரிசெய்ய மேலும் நடவடிக்கைகள் வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுகர்வோர் பணவீக்கம் செப்ரெம்பர் மாதம் 69.8 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் இது இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத நிதி நெருக்கடியை காட்டி நிற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் விலை குறையும் என எதிர்பார்க்கப்படும் அதே வேளையில், பணவீக்கத்தைக் குறைக்க வங்கிகள் வீதங்களை உயர்வாக வைத்திருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களை இலங்கை கடந்த மாதம் ஆரம்பித்துள்ள அதே வேளை, இந்த ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதிய உதவிகள் கிடைக்கும் என்றும் அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு ஏற்ப, அதிக வரிகள் மற்றும் அரச நிறுவனங்களின் பரந்த சீர்திருத்தங்களை உள்ளடக்கி 2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை அரசாங்கம் நவம்பர் நடுப்பகுதியில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியால் விவசாயிகளுக்கு உர நிவாரணம்



கொழும்பு, ஒக். 23

இம்முறை பெரும்போகத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு 1000 கோடி ரூபா நிதியைப் பெற்றுக்கொடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பெரும் போகத்திற்காக எம்.ஓ.பி. வகையான உரத்தை இறக்குமதி செய்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வகை பசளையின் விலை உலக சந்தையில் அதிகரித்துக் காணப்படுவதால், விவசாயிகளுக்கு அதற்கான நிவாரணங்களை வழங்கவும் தீர்மானிக்கபட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார். (அ)

# மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் நடந்த மோசடி அம்பலமானது!

கொழும்பு, ஒக். 23

2020 ஆம் ஆண்டு மருந்து ஆராய்ச்சிக்காக இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் 213 கிலோ மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்துள்ளது.

அதில் 175 கிலோ மருந்து பொருட்கள் தரமற்றதாகவும் பாவனைக்கு தகுதியற்றதாகவும் காணப்பட்டதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 20 இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவிட்டுள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் பல்வேறு காரணங்களால் அந்த வருடத்தில் மருந்து உற்பத்தி இடைநிறுத்தப்பட்டமையால் கிட்டத்தட்ட 26 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஒவ்வொரு உற்பத்தியின் போதும் மோசமான தோற்றம் மற்றும் மாத்திரை உடைவு என்பனவற்றால் ஏற்படும் இந்த மோசமான நிலைமையை குறைக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், 2020 ஆம் ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவால் கட்டளை வழங்கப்பட்ட சுமார் நூறு கோடி ரூபாய் மதிப்பிலான 26 வகையான மருந்துகளில் 570.78 மில்லியன் யுனிட்களை வழங்க மாநகராட்சி தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# கருத்துக்கணிப்பு நடத்திய பிரசன்ன!

கொழும்பு, ஒக். 23

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எடுக்கவுள்ள அரசியல் நிலைப்பாடு தொடர்பில் மினுவாங்கொடை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அரசியல் செயற்குழுவில் மினுவாங்கொடை உள்ளூராட்சி மன்றம் மற்றும் நகர சபையின் தலைவர்கள் உட்பட அவரது பிரதான ஆதரவாளர்கள் 50 பேர் உள்ளனர்.

அமைச்சர் ரணதுங்க முக்கியமான அரசியல் தீர்மானங்கள் எடுப்பதற்கு முன்னர் இந்தக் குழுவுடன் ஆலோசனை நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி ஏற்பட்ட சமயத்தில், பிரசன்ன ரணதுங்க தனது அரசியல் முடிவு குறித்து இந்த குழுவிடம் ஆலோசனை கேட்டிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ தரப்பை வெளிப்படையாக ஆதரிப்பதற்கு முன், இந்த ஆதரவாளர்களின் கருத்தைக் கேட்டிருந்தார்.

மினுவாங்கொடை மபொடல பிரதேசத்தில் அமைந்துள்ள ரணதுங்கவின் உறவினர் ஒருவருக்கு சொந்தமான விழா மண்டபத்தில் கடந்த 20ஆம் திகதி இரவு இந்த இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வருகை தந்த அனைத்து அரசியல்குழு உறுப்பினர்களுக்கும் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்ட வாக்குச் சீட்டு வழங்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் சவாலை ஏற்றுக்கொண்ட தலைவரைத் தொடர்வது பொருத்தமானதா அல்லது இதுவரை இருந்த அரசியல் நிலைப்பாட்டில் பணியாற்றுவது பொருத்தமானதா என்பதுதான் அந்த இரண்டு கேள்விகள்.

உறுப்பினர்களின் வாக்கெடுப்புக்குப் பிறகு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. தற்போது வெளிநாட்டில் இருக்கும் அமைச்சருக்கு முடிவு தெரிவிக்கப்படும் என அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளராகவும் உள்ளார். அவர் தற்போது தனிப்பட்ட பயணமாக பிரான்ஸ் சென்றுள்ளார். (அ)

# மீண்டும் அதிகரிக்கும் மின்சாரக் கட்டணம்?

கொழும்பு, ஒக். 23

மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய சபைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை 12 பில்லியன் ரூபா வரை நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் இந்த நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்கு மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளதோடு கடந்த ஒகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் திட்டத்தை துரிதப்படுத்தவேண்டும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஒக். 23

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த பணிப்புரைகளை வழங்கினார்.

2023ஆம் ஆண்டுக்குள் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அந்த சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதன் மூலம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்கான நிதிப் பரிமாற்றல், இலங்கை பற்றிய எதிர்மறையான கருத்துக்களை அகற்ற எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு விமானங்களை தரையிறக்குவதற்கு அதிக கட்டணம் அறவிடப்படுவதால் சுற்றுலாத்துறையினருக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இது குறித்து ஆராய்ந்து பிரச்னையைத் தீர்க்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களின் முழுப் பயணத்தையும் உள்ளடக்கும் வகையில் கையடக்கத் தொலைபேசி செயலி ஒன்றை சுற்றுலா அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இங்கு குறிப்பிட்டார்.

பல சுற்றுலா ஹோட்டல்கள் இரவு 10.00 மணிக்குள் மூடப்படுவது சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருப்பதனால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுற்றுலா வலயங்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் இந்தியத் திரைப்படங்களின் படப்பிடிப்புக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் சுற்றுலாத்துறைக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலா அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சூலானந்த பெரேரா மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான நிறுவனங்களின் தலைவர்கள், சுற்றுலா தூதுவர் சனத் ஜயசூரிய ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)

## 1 வருட...

வருட காலத்துக்குள் புதிய அரசியல மைப்பை உருவாக்க ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்கு றுதி வழங்கியுள்ளார் என இலங்கை கம்யூனிசக் கட்சியின் பதில் தலை வரும்,பாராளுமன்ற உறுப்பினருமான வீரசிங்க வீரசுமன தெரிவித்தார்.

ஒருவருட காலத்துக்குள் புதிய அரசியலமைப்பை உருவாக்க ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் வினவியபோது மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றம்,பொதுஜன பெரமுனவின் பலவீனத்தை உறுதிப் படுத்தியுள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த, பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உட்பட பெரும்ப லான உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

வாக்கெடுப்பில் கலந்து கொள் வதைத் தவிர்த்து கொள்வதற்காக பொது ஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப் பினர்கள் நாட்டை விட்டு வெளியேறி யுள்ளார்கள்.

ஏழு அறிவுடையவர் என புகழ் பாடப்பட்டவர் உத்தியோகபூர்வமாக அரசியலில் செல்வாக்கு செலுத்த தடை விதிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக் கது.

இரட்டைக் குடியுரிமை உடைய நபர் இலங்கை பாராளுமன்றத்தில் அங் கம் வகிக்க தகுதியற்றவர் என அரசியல மைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட் டமை நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது.

பொருளாதாரத்தை நெருக்கடிக்குள் ளாக்கி நாட்டு மக்களை வீதிக்கிறக்கிய பொதுஜன பெரமுனவின் தலைவர் களை பாதுகாக்கும் மக்கள் பிரநிதி களுக்கு,நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் பாடம் புகட்ட வேண்டும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

நாட்டு மக்களின் கோரிக்கைக்கு அமைய புதிய அரசியலமைப்பு உருவாக் கப்படும்.ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்துள்ள புதிய அரசி யலமைப்பு தொடர்பான வரைவு குறித்து அவதானம் செலுத்தி,ஒருவருட காலத் துக்குள் புதிய அரசியலமைப்பை உரு வாக்க ஆரம்பக் கட்ட நடவடிக்கை களை முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத் துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங் குவோம்.தேர்தல் முறைமை, இனப்பிரச் னைக்கு தீர்வு உள்ளிட்ட காரணிகள் குறித்து புதிய அரசியலமைப்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும்.காலம் காலமாக புரையோடி போயுள்ள பிரச் னைகளுக்கு புதிய அரசியலமைப்பு ஊடாகவே தீர்வு காண முடியும்-என் றார். (அ)

## புலமைப்பரிசில்...

செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்துடன் வினாத்தாளின் பகுதி - I பின்னர் வழங்கப்படும்.

இதன்கீழ் 2022, டிசெம்பர் 18, இல் திட்டமிடப்பட்ட 2022 தரம் 05 புல மைப்பரிசில் கால அட்டவணை பின் வருமாறு இருக்கும்:

- பகுதி II (60 பல தேர்வு மற்றும் குறுகிய பதில் கேள்விகள்)

முற்பகல் 09.30 மணி முதல் 10.45 மணி வரை (ஒரு மணி நேரம் 15 நிமி டங்கள்)

- பகுதி I (40 பல் தேர்வு கேள்வி கள்)

முற்பகல் 11.15 மணி முதல் 12.15 மணி வரை. (ஒரு மணி நேரம்)

## ‘22 ஐ...

விவாதங்கள்“ பத்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆளும் கட்சி பாராளு மன்றக் குழுக் கூட்டத்தில் 22 ஆவது அரசமைப்பு திருத்தம் பிரதானமாக விவாதிக்கப்பட்டது.

பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய ரணில், 22 ஆவது அரச மைப்பு திருத்தத்தை நிறைவேற்ற முடி யாது விட்டால், அனைத்துலக நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. அரசமைப்பு திருத்தத்தின் மூலம் அரசியல் சீர்திருத்தங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன. அதன் பிறகு பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற் கொள்ளலாம்.

இதனை தவறவிட்டால், நீங்கள் இறந்து விடுவீர்கள். எதுவாக இருந்தா லும் இந்த அரசமைப்பு திருத்தத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும். இதனை தவிர்க்க முடியாது என்று உறுதியான குரலில் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ள தாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளை...

சாலை ஒன்றில் நேற்று முன்தினம் இந் தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது: -

குறித்த மாணவன் போதை ஊட்டிய பாக்குடன் பாடசாலைக்கு சென்றுள் ளார். அது தொடர்பில் அறிந்த ஆசிரி யர்கள் மாணவனிடம் விசாரணைகளை முன்னெடுத்துப் போதைப் பாக்கையும் மீட்டனர்.

அதையடுத்து அதிபர் ஊடாக அப் பகுதி சுகாதாரப் பரிசோதகருக்குச் சம்ப வம் தொடர்பில் அறிவித்தபோது , குறித்த மாணவன் தனது கையைப் பிளேட்டால் வெட்டினார்.

இதனால் காயத்துக்குள்ளான மாண வன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டார்.

மாணவனுக்கு எங்கிருந்து போதைப் பாக்கு கிடைத்தது? போதைப் பாக் கைப் பாடசாலைக்கு அருகில் யாரே னும் விற்பனை செய்கின்றார்களா? என் பது தொடர்பில் விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

## பொருளாதார...

வாக செய்ய தூண்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக பல்வேறு உணவு வகைகளை இலஞ்சமாக பெற்றுக்கொள் ளும் சம்பவங்கள் பல பதிவாகியுள்ள தாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் கூற்றுப் படி, கடந்த வருடம் அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் உட்பட 83 பேர் மீது லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக் குத் தொடரப்பட்டது.

இதில் பெரும்பாலான வழக்குகள் லஞ்சம் தொடர்பானவை. வழக்குகளின் எண்ணிக்கை 55.

இதேவேளை, நாடு முழுவதும் பல் வேறு மோசடிகள் மற்றும் திருட்டுகள் வேகமாக அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# அனைத்து அரசியல் கைதிகளினதும் விடுதலைக்காகப் பாடுபடவேண்டும்

யாழ்ப்பாணம், ஒக். 23

அரசியல் கைதிகளின் விடுதலையை வரவேற்கின்ற அரசியல் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள், பொது அமைப்பு கள் அறிக்கையுடன் மாத்திரம் நின்று விடாது அனைத்து அரசியல் கைதி களின் விடுதலைக்காக பாடுபடவேண் டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்ட காலமாக தடுத்து வைக்கப் பட்டிருந்த எட்டு அரசியல் கைதிகள் ஜனாதிபதியினால் விடுதலை செய்யப் பட்டிருக்கின்றனர்.

நான்கு பேர் விடுதலை செய்யப் பட்டு வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். ஏனைய நான்கு பேரில் இருவர் மேன்முறையீட்டு வழக்கு இருப்பதால் அந்த வழக்கினை மீளப்பெறப்பட்ட பின்னர் விடுதலை செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல ஏனைய இருவருக்கும் ஒரு வருடம் புனர்வாழ்வளிக்கவேண்டி தீர்ப்பு இருப்பதன் காரணமாக சிறைச் சாலை நிர்வாகம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் எதிர்வரும் வாரங்களில் விடுதலை செய்யப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

பொது மன்னிப்பு அளிப்பதை அரசி யல் கைதிகளுடைய விடுதலைக்கான தொடக்கமாக குரலற்றவர்களின் குரல் அமைப்பு பார்ப்பதுடன் அதனை வரவேற்கின்றது.

அதே நேரத்தில் நீண்ட காலமாக இருக்கின்ற ஆயுள் தண்டனை கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை.

இதனை ஒரு தொடக்கமாக கருதி மீதமுள்ள ஏனைய கைதிகளையும் விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை விரைந்து எடுக்கப்பட வேண்டும்.

புலம்பெயர்ந்த அமைப்புக்களுடன் நாட்டின் பொருளாதாரம் தொடர்பான கலந்துரையாடலொன்று இடம்பெற உள்ளதாக அறிகின்றோம்.

அதில் உள்ள புலம்பெயர்ந்த உறவு கள், புலம்பெயர் அமைப்புகள் மீத முள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நலன் அடிப்படையிலும் மனிதாபிமான அடிப்படையிலும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்த வேண்டுமென நாங்கள் கோருகின்றோம்.

விடுதலையை வரவேற்கின்ற அரசி யல் கட்சிகள், அரசியல் பிரதிநிதிகள் பொது அமைப்புகள் அறிக்கையுடன் மாத்திரம் நின்றுவிடாது அவர்களது விடுதலைக்காக பாடுபட வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்- என் றார். (அ)

## எட்டு அரசியல்...

இந்த நால்வரில் ரகுபதி சர்மா உள் ளிட்ட இருவர் தமது சிறைத்தண்ட னைக்கு எதிராக மேன்முறையீடு செய் துள்ளனர். தற்போது அவர்கள் தொடர் பான நீதிமன்ற நடவடிக்கைகள் முற் றுப்பெறாத நிலையில் உள்ளதாகவே கருதப்படுகின்றது. ஆதலால், நீதிமன் றில் அவர்கள் இருவரும் தமது சட்டத் தரணிகள் ஊடாக மேன்முறையீட்டை திரும்பப் பெற்றதும் நீதிமன்ற நட வடிக்கைகள் முற்றுப்பெற்றதாகக் கருதப்பட்டு அவர்கள் இருவரும் விடுவிக்கப்படுவார்கள்.

ஏனைய இரண்டு பேருக்கும் நீதிமன் றம், கடூழியச் சிறைத்தண்டனையுடன் 6 மாதங்கள் புனர்வாழ்வும் வழங்கித் தீர்ப் பிட்டுள்ளது. ஆதலால், அவர்கள் புனர் வாழ்வுக்குச் செல்லாமல் விடுவிக்கப்படு வதாயின் ஜனாதிபதி செயலகத்திலி ருந்து அறிவுறுத்தலொன்று வரவேண்டி யுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு நீதிமன்றத் தால் தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் ஆதாரத்துடன் சுமத்தப்படாததை அடுத்தே நீதிமன்றத் தால் விடுவிக்கப்பட்டுள்ளார்” - என் றார். (அ)

## மாகாண சபைத்...

திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல் கால தாம தித்த குற்றச்சாட்டு என் மீது திணிக்கப் பட்டுள்ளது. இதுதான் அநேகமானோர் விட்டுள்ள தவறாகும்.

மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்தியது நான் என்று பலரும் நினைக் கிறார்கள். ஆனால் சட்ட வரைவுகளைச் சரியாக அறிந்துகொள்ளாமல், நான் தான் மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தியுள்ளதாக சமூகமயப்படுத்தி யுள்ளனர். முதலில் உண்மை எது என் பதை தெரிந்துகொள்ளவேண்டும்.

மாகாண சபை தேர்தலுக்காக எல்லை நிர்ணய குழுவொன்று அப் போதைய ஜனாதிபதியான மைத்திரி பால சிறிசேனவால் நியமிக்கப்பட்டி ருந்தது. ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட எல்லை நிர்ணய குழு குறித்த அறிக்கையை என்னிடம் சமர்ப்பித்தது.

அந்த குழுவின் அறிக்கை அங்கீகரிக் கப்படவேண்டுமெனில், பாராளுமன் றில் 3/2 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டும். இருப்பி னும், அது பாராளுமன்றில் நிராகரிக்கப் பட்டது. இந்த அறிக்கையை சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் நிரா கரித்திருந்தனர். நான் மாத்திரம்தான் அந்த அறிக்கையை அங்கீகரித்திருந் தேன்.

அப்போதைய மேன் முறையீட்டு குழுத் தலைவராக தற்போதைய ஜனா திபதியே இருந்தார். எல்லை நிர்ணய அறிக்கையின் மேன்முறையீட்டு அறிக் கையை ஜனாதிபதியிடம் கையளிக்க வில்லை. அதன் பின்னர் வந்த பிரதம ரும் எல்லை நிர்ணய அறிக்கையின் மேன்முறையீட்டு அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவில்லை.

இப்போதும்கூட எல்லை நிர்ணய அறிக்கையின் மேன்முறையீட்டு அறிக் கையை ஜனாதிபதியிடம் பிரதமர் கைய ளித்து நாளை வேண்டுமானாலும், மாகாண சபைத் தேர்தலை வைக்க முடி யும். என் மீது குற்றம் சுமத்துபவர்கள் முதலில் உண்மை தெரிந்து கொள்ள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல்களை அடுத் தாண்டு மார்ச் மாதத்துக்குள் நடத்து வதற்கான பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. ஜனநாயக நாடென்ற ரீதி யில் குறித்த காலத்துக்குள் மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டும்.

அவ்வாறு மாகாண சபைத் தேர்தல் களை அடுத்தாண்டு மார்ச் மாதத்திற் குள் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தாது போனால் நீதிமன்றத்தை நாடும் உரிமை பொது மக்களுக்கு உண்டு-என் றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# உலகுக்கு சிறந்த முன்னுதாரணமாக செயல்படுகிறார் ஜனாதிபதி ரணில்!

## அக்குரெட்டியே நந்த தேரர் பாராட்டு

கொழும்பு, ஒக். 23

ஒரு ஜனநாயக தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம், உலகிற்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாக செயல்பட்டுள்ளதாக ருஹுணு பல்கலைக்கழகத்தின் வேந்தர், கலாநிதி அக்குரெட்டியே நந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சேதவத்த, வேரகொட புராதன விகாரையின் கட்டின புண்ணிய நிகழ்வு நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றியபோதே நந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு வழங்க, ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் செயல்பாடானது நிச்சயமாக நாட்டின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விகாரையின் தலைவர் வணக்கத்திற்குரிய அம்பன்வெல ஞானலோக தேரரின் ஆலோசனைக்கு அமைய வருடாந்த கட்டின புண்ணிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டின புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டதுடன், பிக்குகளுக்கு அன்னதானமும் வழங்கினார்.

அங்கு கலாநிதி அக்குரெட்டியே நந்த தேரர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயக உலகின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அறியப்படுகிறார். இன்று உலக நாடுகள் அனைத்தும் நம் நாட்டையே உற்று நோக்குகின்றன. ஜனாதிபதி தனது அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு மாற்றும் மாபெரும் செயற்பாடு ஜனநாயக கட்டமைப்பிற்குள் நடந்துள்ளது. 22 ஆவது திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விட அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன. இந்த நாட்டில் புதிய யுகத்தை ஆரம்பிக்க தயாராகி வரும் இந்த நேரத்தில் இது மிகவும் முக்கியமான செயலாகும். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற அனைத்து ஜனநாயக நிறுவனங்களும் இன்று நம்மை கவனித்துக் கொண்டிருப்பதால் இது மிகவும் முக்கியமானது-என்றார். (அ)



# நட்சத்திர ஹோட்டல்களில் இருந்து உணவு பெற்றுக்கொள்ளவேண்டாம்

## அரச நிறுவன தலைவர்களுக்கு அரசு அறிவுறுத்து

கொழும்பு, ஒக். 23

கூட்டங்கள் மற்றும் விழாக்களுக்கு நட்சத்திர ஹோட்டல்களில் இருந்து உணவுகளை கொண்டு வரவேண்டாம் என அரசு நிறுவனங்களின் தலைவர்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

நட்சத்திர ஹோட்டல்களில் சாப்பிடுவது என்பது பல நிறுவனங்களில் நீண்ட காலமாக நடந்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு இவ்வாறான செலவுகளை மேற்கொள்வது பொருத்தமானதல்ல என அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார். ஆகவே அரச நிறுவனங்களின் செலவுகளை இயன்றவரை மட்டுப்படுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டார். (அ)

# தீபாவளிக்கு மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஒக். 23

தீபாவளி தினத்திற்கான மின்வெட்டு தொடர்பான அறிவிப்பை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் மூன்று தினங்களுக்கான மின்வெட்டு அறிவித்தலை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

தீபாவளி தினத்தன்றும் மின்தடையை நடைமுறைப் படுத்தல் தொடர்பில் தாம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளதாகவும், பெரும்பாலும் தீபாவளி தினத்தன்று மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

# இலஞ்சம் பெறும் நிறுவனங்களில் பிரதேச செயலகங்களே முதலிடம்

கொழும்பு, ஒக். 23

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் கூற்றுப்படி, இலஞ்சம் அதிகமாகப் பெறப்படும் நிறுவனங்களில் பிரதேச செயலகங்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

பொலிஸ், கல்வித் துறை, இலங்கை சுங்கம், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம், உள்ளூராட்சிச் சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் கலால் திணைக்களம் என்பன இலஞ்சம் அதிகம் இடம்பெறும் நிறுவனங்களாகும் என இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் அதிகம் தொடர்புபடும் நிறுவனங்களில் இலஞ்சம் பொதுவாக காணப்படுவதாகவும், பிரதேச செயலகங்களில் இலஞ்சம் அதிகரிப்பதற்கு குறிப்பாக உரிமம் வழங்குதல் போன்ற பிரச்னைகளே பிரதான காரணம் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இந்த நிறுவனங்களில் லஞ்சம் பெறுவது தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிகக் குறைவு என்று கூறும் ஆணைக்குழு, முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாத பல வழக்குகள் இருப்பதாகவும் கூறுகிறது.

ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிலர் அலைந்து திரிவதைத் தவிர்ப்பதற்காக எவ்வளவு இலஞ்சம் கொடுத்தேனும் தங்கள் வேலையைச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

நாடு முழுவதும் உள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை முன்னூறுக்கும் அதிகமாகும். (அ)

# விபத்தில் இராணுவ கப்டன் பலி!

கொழும்பு, ஒக். 23



வெலிகந்தையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ கப்டன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இராணுவச் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐந்து இராணுவத்தினர் திருகோணமலையில் இருந்து மாதுரு ஓயா இராணுவ முகாமுக்கு பணி நிமித்தம் பயணித்தபோதே சிங்கபுர - வெலிகந்தை வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தில் முன் பயணிகள் இருக்கையில் அமர்ந்திருந்த இராணுவ கப்டன் உயிரிழந்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாரதி உட்பட மேலும் நான்கு இராணுவத்தினர் சிகிச்சைக்காக பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த கப்டன் மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடையவராவார். அவரது சடலம் தற்போது வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலை: 4,929 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 23

கடந்த சில நாட்களாக நாட் டில் நிலவும் சீரற்ற காலநிலை யால் 1,296 குடும்பங்களைச் சேர்ந்த 4,929 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத் துவ நிலையம் தெரி வித்துள்ளது.

31 குடும்பங்களைச் சேர்ந்த 116 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்ச ரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.